ஸ்ரீ-ஸ்ரீ

சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

திருவடிகளே சரணம்.

கடைச்சங்கத்துள் ஒருவராகிய

கணிமேதாவியார்

செய்த

திருநெல்வேலி இந்து சர்வகலா சாலை

Tamil Pundit

A. T. சபாபதியா பிள்ளை

செய்த

உரை முதலியவும்.

---

PRINTED AT THE DARLING PRESS

PALAMCOTTAH.

*Price. 6. Annas.*

*Copy right reserved.*

ஸ்ரீ-ஸ்ரீ

சுப்பிரமணிய தேசிகஸ்வாமிகள்

திருவடிகளே சரணம்.

கடைச்சங்கத்துள் ஒருவராகிய

கணிமேதாவியார்

செய்த

# ஏலாதியும்

திருநெல்வேலி இந்து சர்வகலா சாலை

Tamil Pundit

A. T. சபாபதியா பிள்ளை

செய்த

உரை முதலியவும்.

INTED AT THE DARLING PRESS.

PALAMCOTTAH.

*Price. 6. Annas.*

*Copy right reserved.*

உ

கடவுள் துணை

THE TAMIL

# MATRICULATION TEXT BOOK

For 1881.

---

## ஏலாதி மூலமும் உரையும்

---

### காப்பு.

அறுநால்வ ராயபுகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப் - பெறுநான் [க்
மறைபுரிந்துவாழுமேன்மண்ணொழிந்துவிண்ணோர்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

(இதன் பொருள்) புகழ்ச்சேவடி—(பொருள்சேர்ந்த) புகழினையுடைய (சடவுளது) சிவந்த பாதங்களை, ஆற்றப் பெறு நால்வராய—முற்றும்பெற்ற (சனகாதியர்) நால்வராகிய, அறுநால்வர்—இருபத்து நான்செழுத்துக்சளையுடைய காயத்திரி மந்திரமே ரூபமாகவுடையோர், பேணி வழங்கி—போற்றி அனுஷ்டித்தது காரணமாக, பெறுநான்மறைபுரிந்து—யாவரும்பெற்றுக்கொண்ட நான்குவேதங்களிற் கூறியவாறு ஒழுகி, வாழுமேல்—(ஒருவன்) வாழுவானேயாயின், மண்ணொழிந்து— பூவுலகை (புகழோடு) நீத்து, விண்ணோர்க்கிறைபுரிந்து— தேவேந்திரனாகியங்கரசுசெலுத்தி, வாழ்தலியல்பு—நீடூழிவாழ்வது இயலும் என்றவாறு.

வேதநெறியிலகாது நடப்பவர் விண்ணவர்க்கிறைபுரிவர் என்பது கருத்து—ஆயவனெச்சம் பிரித்துக்கூட்டப்பட்டது. வழங்கி—செயவென்னெச்சத்திரிபு. திரிகடுகத்து மூன்று பொருளும் நான்மணிக்கடிகையினான்குபொருளும் சிறுபஞ்சமூலத்தைந்துபொருளும் போலிங்கறுபொருள் கூறுவமென்பார் அறுநால்வரென்று தொடங்குகிறார்.

இயலும்—கூடும். வாழும்—உயர்திணை ஆண்பால் படர்க்கைவினைமுற்று. "பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே."

நால்வர்—சனகர், சனந்தரர், சனற்குமாரர், சனற்குசாதர். இவர்கள் கல்லாலின்கீழ் தெக்ஷணாமூர்த்தியினிடத்து வேதரகசியம்பெற்றவர்கள். இவர்கள் காயத்திரிமந்திரமே ரூபமாயுடையோரென்பது வெளி. காயத்திரிமந்திரம் 24. எழுத்துக்களுடையது. அறுநால்வராயநால்வர் பேணி வழங்கப் பெறுநான் மறைபுரிந்து வாழுமேல் எனக்கூட்டுக. நான் மறைபுரிந்துவாழ்பவர் இம்மையில் அநுபவிக்கும் நன்மை அடுத்த பாட்டில் கூறப்பட்டது. இந்நூல்செய்த மேதாவியார்சைவரேயன்றி மற்றையரல்லர். இனி அறுநால்வர் என்பதனையான் எனதென்னும்பற்றற்ற நால்வர் எனக்கொள்ளலாகாதோவெனின் சனகாதியர் பிரமஞானியராயே பிறந்திருந்து சிவபதமடைந்தவராதலாலும் மேற்கூறியவாறே ஆறுபொருட்படக் கூறப்படுமிந்நூலெனவுரைதற்கே எண்ணூஙிய ஆறின்திரிபாகிய அறுவென்றெடுத்ததினாலும் கொள்ளலாகாதென்க

நூல்

சென்றபுகழ் செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை — என்றும்
வழிவந்தார் பூங்கோதா யாறு மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

இ-ள். ஆர்பூங்கோதாய்—நிறைந்த பூவையணிந்த கூந்தலையுடையாய், சென்றபுகழ்—(திசையெங்கும்) சென்றபுகழ், செல்வம்—(குன்றாத) செல்வம், மீக்கூற்றம்—ஸ்துத்தியம், சேவகம்நின்றநிலை—முயற்சியைவிட்டு நீங்காநிலைமை, கல்வி—வித்தை, வள்ளன்மை—(வரையாது) ஈதல், ஆறும்—(ஆகிய இவ்) ஆறும், என்றும் வழிவந்து—தொன்மையுடைய குடிப்பிறந்து, மறையின்வழிவந்தார்கண்—வேதநெறியிலொழுகுவோரது, வனப்பு—இலக்ஷணம் எ—று.

வேதநெறியிலொழுகுவோர் இவ்வாறுமிவ்வுலகிற்பெறுவரென்பதுகருத்து. மகடூஉமுன்னிலையாகக் கூறியது ஏனைநீதிநூல்களுங்காண்க. வழிவந்தார் கண்ணே-உடைமை இடத்துமயங்கியது வேற்றுமைமயக்கம். 1.

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான்
கூர்த்த, அலைபுரியான் வஞ்சியான் யாதும்-நிலைதிரி
யான், மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங்கோதாய்,
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

இ—ள். மதுமலிபூங்கோதாய்—தேன்பொழியும் பூவையணிந்த கூந்தலையுடையாய், கொலைபுரியான்—பிறர் மற்றொருயிரைக் கொலை செய்தலுக்கு முடன்படானாகி, கொல்லான்—தானுமற்றொன்றைக் கொல்லாதவனாய், புலான்மயங்கான்—ஊன்தின்னும் ஆசைமேற்கொண்டொழுகாமல், கூர்த்த அலைபுரியான்—(பிறவுயிரை) மிகுந்த இம்சைக்குள்ளாக்காது, வஞ்சியான்—பொய்த்துவாழ்தலொழிந்து, யாதும்நிலைதிரியான்—யாதுகாரணம்பற்றியும் தன்னிலைமையினின்று விலகாதவன், மண்ணவர்க்குமன்றி—பூவுலகத்தாரது வணக்கத்துக்குமுரியனாகியதன்றி, விண்ணோர்க்கு மேலாய் விடும்—வானுலகத்தார் வணக்கத்துக்கு முரியனாவது திண்ணம் எ—று.

கொன்று தின்னல், துன்பஞ்செய்தல், வஞ்சித்தல், நிலை தடுமாறல் ஆகியகுற்றமற்றவர் யாவராலும் வணங்கப்படுவரொ ன்பது கருத்து. கொலைபுரியான் முதலிய வினைமுற்று வி னையெச்சமாயது காண்க. "வினைமுற்றே வினையெச்சமாதலு ம். &c." கூர்த்த இறந்தகாலப்பெயரொச்சம், கூர் (பகுதி) த் (சந்தி) த் (இறந்தகால இடைநிலை) அ (பெயரொச்ச விகுதி) அலை, பூ—முதனிலைத்தொழிற்பெயர்கள்.

யாதும் முற்றும்மை. நிலை—தொழிலாகுபெயர். நில் (பகு தி) ஐ (தொழிற்பெயர்விகுதி). மலி—வினைத்தொகை. விடும்—துணிவுப்பொருளது.

நிலை என்னுந்தொழிற்பெயரும் நகை என்னுந்தொழிற் பெயர்போன்று வினை விகற்பம்பெறும்.

நிலைத்த, நிலைந்து, நிலைக்கின்ற, நிலைக்க, நிலைக்கும், நிலைப்பி ன். நகைத்த, நகைத்து, நகைக்கின்ற, நகைக்க, நகைக்கும், நகைப்பின், நக்க, நக்கு, நகுகின்ற, நக, நகும், நகின். நின்ற நின்று, நிற்கின்ற, நிற்க, நிற்கும், நிற்பின். 2.

தவமெளிது தான மரிதுதக் கார்க்கேல்
அவமரி தாத லெளிதால் அவமில்லா
இன்பம் பிறழி னியைவெளிது மற்றதன்
துன்பந் துடைத்த லரிது,

இ—ள. தவமெளிது—(யாவர்க்கும்) தவஞ்செய்தல்எளிது, தானமரிது—கைப்பொருள் வழங்கலரிது, தக்கார்க்கேல்—பெரி யோர்க்கு, அவமரிது—குற்றத்துக்குள்ளாதலரிது, ஆதலெளி து—(நன்னெறியிலொழுகிப்பக்குவர்) ஆதலெளிது, அவமி ல்லாவின்பம்பிறழின் —கெடுதலில்லா (நித்தியமாகிய) இன் பநெறிதடுமாறிச்சென்றால், இயைவெளிது—பிறட்பிற்பொருந்

துநலெளிது, மற்றதன் துன்பர்துடைத்தலரிது—அவ்வாறு பிறந்தநின்கண்ணுண்டாகுந்துன்பத்தை நீக்கிக்கொள்ளுதல் அரிது எ—று.

தருமவழிபாடுடையது செய்தற்கரிதானுலுமதைக் கைவிட்லாகாதென்பதுகருத்து. ஆகவே தருமவழி பாடல்லாதது செய்தற்கு எளிதானுலுமதைக்கைவிடலே கடமையறிக. எளிது—சாத்தியம். அரிது-அசாத்தியம். அரிது—அருமை (பகுதி). எளிது—எண்மை (பகுதி). தக்கார்—தகு (பகுதி) பகுதி யிரட்டித்து இறந்தகாலங் காட்டியது, ஆர் (பலர்பாற் படர்க்கை விகுதி) உகரக்கேடுசந்தி. இறந்தகாலவினையாலணையும்பெயர். இயைவு—இயை (பகுதி). அவமில்லா இன்பம் இங்கு ஆகுபெயராய் பேரின்பமாகிய முத்திநெறிக்காயிற்று. தானம்-இல்லறதருமம். 3.

இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி—னடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்.

இ-ள. இடர்தீர்த்தல்—தனக்குறுந்துன்பந் துடைத்தலும், எள்ளாமை—பிறனை நிந்தை செய்யாமையும், கீழினஞ்சேராமை—கீழ்மக்களோடு பழகாமையும், யார்க்கும் படர்தீர்த்தல்—யாவர்க்கேனுமுண்டாந் துன்பங்களைதலும், பழிப்பின் நடை தீர்த்தல்—(உலகம்) பழிக்கும்படியான வழியினீங்குதலும், கண்டவர்காமுறுஞ்சொல்—கேட்டோர் விரும்புமின் சொல்லும், காணில்—(ஆகிய இவ்வாறும்) ஒருவன் தானே கண்டு கொண்டானெனில், (அவன்) கல்வியின்கண் விண்டவர்நூல்—கற்றறிந்தோராற் சொல்லப்பட்ட சாஸ்திரத்தை, வேண்டாவிடும்-பார்த்து அறியவேண்டிய பொருள் ஒன்றுமில்லாதவன் ஆவன் எ—று.

தனக்குறுந்துன்பந்துடைத்தல்-"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்றாங் கைம்புலத்தா றோம்ப றலை." என்பதனாலும், 'யார்க்கும்படர்தீர்த்தல்' எனப்பின்னே பாடியதனாலுங் காண்க. காமுறும்-காமம், அம் ஈறுதொக்கது. காமம்—ஆசை, உறுதல்—அடைதல், பொருந்தல், கொள்ளல். சாஸ்திரக்கேள்வியான்வரும் பயனாகிய நல்லொழுக்கம் தானே பொருவனுக்கமையுமாயின் அவன் சாஸ்திரத்தை யாதுகருதிகொள்ளல்வேண்டும்? வேண்டாவாதலாலவன் பெருமை துதிக்கப்பட்டது. கண்டோனைக்கேட்டோனொன்றது சம்மந்தம்பற்றி. காணில்—கண்டு அவற்றைக்கொண்டானெனில் எனக்கூட்டுக. கண்டு—அறிந்து.

தனக்கென்று மோர்பாங்கற் பொய்யான் மெய்
யாக்கும், எனக்கென் றியையான்யா தொன்றும் -
புனக்கொன்றை, போலு மிழையார்சொற் றேறான்
களியானேல், சாலும் பிறர்நூலின் சால்பு.

இ-ள. தனக்சென்று பொய்யான்—சுயகாரிய சித்தியின்பொருட்டுப் பொய்யாதவனும், ஓர்பாங்கற் பொய்யான்—ஒப்பற்றதன்தோழனுக்காகவும் பொய்புரையாதவனும், மெய்யாக்கும்—உண்மையை (வாய்மையை) உரைக்கின்றவனும், யாதொன்றும் எனக்கென்றியையான்—எப்பொருளிடத்தும் எனது என்னுமபிமானமில்லானும், புனக்கொன்றை போலுமிழையார் சொற்றேறான்—முல்லைநிலத்துக் கொன்றைப்பூவன்ன ஆபரணந்தாங்கும் பெண்களது சொல்லைப் பேணாதவனும் களியானேல்— (செல்வமதினால்) களியாதவனுமாக ஒருவன் வாழ்வானாகில், பிறர்நூலின் சால்பு—பிறர்கூறியதரும சாஸ்திரத்தின் மேன்பொருள்கள், சாலும் (அவனுக்குத்தானே) அமையும் எ—று. C. F. 3rd Stanza.

பொய்யொழிந்து மெய்யுரைத்துப் பற்றுவிட்டுத் தையல் சொற்கேளாது களியாரொருவனுக்குத் தருமநூற்கேள்விவேண்டியதில்லை யென்பது கருத்து. தருமநூலிற் கூறும் பொருள்களிவையேயன்றி மற்றல்ல ஆதலால்.

பாங்கற்பொய்யான்-நான்காம் வேற்றுமைத்தொகை. பொய்யான் என்பதை தனக்கென்றென்பதனோடும் குவ்வைபாங்கனென்பதனோடும் பிரித்துக் கூட்டிக்கொள்க. கொன்றை மலர் மஞ்சள்நிறமுடையது.

இழை—ஆபரணம்.

சால்பு—ஆகுபெயராய் சான்ற பொருளுக்காயிற்று. சால்பு, சாலும், சால் (பகுதி).

அவன் (இடைத்த எழுவாய்), சாலும் (பயனிலை)எனினும், சால்பு (எழுவாய்), சாலும் (பயனிலை) எனினும் பொருள்முதலியன வேறுபடாது பொருந்தல் காண்க. முல்லை—இடைத்திணை. நிலம் ஐந்துதிணையாகும்-குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என. செல்வமதிறுல் என்பதை செல்வம், மது, என்னவுங்கொள்க. மது—கள். 5.

நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே,
பொறையுடைமை பொய்மை புலாற்கண் - மறை
யுடைமை, வேயன்னதோளா யிவையுடையான் பல்
லுயிர்க்கும், தாயன்ன னென்னத் தரும்.

இ-ள். வேயன்னதோளாய்-பசுமூங்கிலினதுமெதுவுடைய தோளாய், நிறையுடைமை—(புலன்வழியேபோகாதுதன் மனதை) நிறுத்தும் வசமும், நீர்மையுடைமை-நற்குணமுடைத்தாதலும், கொடையே-ஈகையும், பொறையுடைமை-(எத்திறத்தும்) பொறுதியோடுகூடியிருத்தலும், பொய்மைக்கண்ம

றையுடைமை—பொய்கூறவிடாது தன்னை யடக்குதலும், புலாற்கண்மறையுடைமை—ஊன்றின்னவிடாது தன்னையடக்குதலும், இவையுடையான்—(ஆகிய இவ்வாறும்) பொருந்திய ஒருவன், பல்லுயிர்க்கும்—சகல சீவர்கட்கும், தாயன்னனெனத்தகும்—தாயினது அன்பு போலும் அன்பினையுடையவன் என்று யாவரும சொல்லத்தகுந்தவன் ஆவன் எ—று.

தாய்க்குரிய அன்போடுகூடிய நற்குணங்கள் இவ்வாறுமாதலால் இவன் தாயொப்பானென்பது கருத்து. தோளாய்—மகடூஉ முன்னிலை.

கண், மறையுடைமை இரண்டையும் பொய்மையோடுங் கூட்டுக.

உடையான் (எழுவாய்) தகும் (பயனிலை). தகும்-செய்யும் என்னும் வினைமுற்று. ஆண்பாற் படர்க்கை. இதுபெண்பால், ஒன்றன்பால் பலவின்பாலுக்கும் வரும். ஏ—எண்ணுப் பொருள். மறை—மறுத்தல். 6.

இன்சொ லளாவ லிடமினிதூண் யார்வர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

இது இல்லற தருமம நடத்துவோர் தம்மை நோக்கிவரும் விருந்தினரை யுபசரிக்கும் பத்ததி கூறியது. இ-ள். மென்சொல் முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய்-மிருதுவாகிய சொல்லையும், பீலியினது அடியை ஒத்து விளங்கும் கூரிய பல்லையு முடையாய், யாவர்க்கும்—(தன்னில்லம நோக்கிவரும் விருந்தாவார்) யாவரிடத்தும், இன்சொல்—இங்கிதமா

ன சொல்லை யுரைத்தலும், அளாவல்—கலந்துறவாடலும், இடம்—ஆசனமளித்தலும், இனிதூண்—அறுசுவையோடு பொருந்திய உண்டியளித்தலும் (செய்து), வன்சொற்களைந் து—கடுஞ்சொல் மறந்து, வருப்பானேல்—உபசரிப்பானே யாயின், (அவனை) நாளும்—எக்காலமும், விண்ணோர்—வானவர், விரைந்து விருந்தேற்பர்—விரைந்து எதிர்நோக்கி வந்துதமக்கு விருந்தினனாகும்படி வேண்டிக்கொள்வர் எ—று.

இன்சொல், அவளால், இடம், இனிதூண், வன்சொற்களைதல், வருத்தல் என அறுபொருள் காண்க. விருந்தும் வேள்வியோடொக்கும். மானிடயாகமென வழங்குதலுங் காண்க. பீலி—மயிலிறகு. வருத்தல்—சொடுத்தல், விருந்தினர்க்காதலால் உபசரித் தென்றனம்.

விண்ணோர் (எழு) ஏற்பர் (பய) யார்க்கும்—ஏழாம் வேற்றுமை மயக்கம்.

"செல்விருந்தோம்பிவருவிருந்து காத்திருப்பான்.
நல்விருந்து வானத்தவர்க்கு." திருக்குறள். 7.

**உடன்படான் கொல்லா னுடன்றார்நோய் தீர்த்து**
**மடம்படான் மாண்டார்நூன் மாண்ட - இடம்பட**
**நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை**
**யாக்குமவர் யாக்கு மணைந்து,**

இ-ள. உடன்படான்—(ஒன்றனைப் பிறர்சொல்ல) உடன்படாமல், கொல்லான்—(தானும்) கொல்லாமல், உடன்றார நோய் தீர்த்து—(பிணியால்) வருந்தினோர் நோயைத் தீர்த்து, மடம்படான்-பேதைமையாகிய தொழிலி லிறங்காதே, மாண்டார்நூல் மாண்ட இடம்பட நோக்கும் வாய்நோக்கி—மாட்சிமைப் பட்டாரது நூலிற்கூறிய நன்னெறி நல்லொழுக்கம்

தனக்குப்பெருகும்படி.பெரியாரைக் கேட்டாராய்ந்து, நுழை வானேல்— ( தான் ஆராய்ந்தவற்றில் ) புகுந்து ஒழுகுவானாயின், அவனையாக்குமவர்—அவனை யணைந்தார்க்கும், அணைந்து—நன்னெறி யெல்லாங்கூடி, யாக்கும்—பொருந்தும் எ—று.

நன்னெறியி லொழுகுவோரைச்சேர்ந்தவரும்நற்கதி பெறுவர் என்பதுகருத்து.

ஆகவே நம்மை யடுத்தோர்க்கும் நன்மையே தரும்படியான செயலில்ஒருவனிருப்பது தருமம். [நோக்கிநுழைவானேல்]· நோக்குதல், நுழைதல், கொல்லாமை,அதற்குடன்படாமை, நோய்தீர்த்தல், மடம் படாமையோடு, பொருள்ஆறுதல் காண்க.

யாக்குமவரோடு கூட்டிய உம்மை விகாரத்தாற்றொக்கது. உடன்றார்—உடல் (பகுதி), ற் ( இறந்தகால இடைநிலை ), ஆர் ( பலர்பாற் படர்க்கை விகுதி ), ல், ற் ஆய் ன் ஆனது சந்தியும் விகாரமும். மாண்டார்—மாண் ( பகுதி ), ட் [ இறந்தகால இடைநிலை ], ஆர் [ பலர்பாற் படர்க்கை விகுதி ]. மாண்டார்—இறந்தார் என்னும்பொருட்கு வருமெனின் மாள் [ பகுதி ], ட் [ இறந்தகால இடைநிலை ], ஆர் [பலர்பாற் படர்க்கை விகுதி ], ள், ட், ஆய், ண், ஆனது சந்தியும் விகாரமும். மாண்ட-பலவின்பாற் படர்க்கை வினையா லணையும் பெயர், இவையனைத்தும் பகுவிகுதி குன்றியன.

மாண்ட ( எழு ) யாக்கும் ( பய ). 8.

கற்றாரைக் கற்ற துணரா ரெனமதியார்
உற்றாரை யன்னணமோ ராமல் - அற்றார்கட்
குண்டியுறையு ளுடுக்கை யிவையீய்ந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

இ-ள். கற்றாரைக்கற்ற துணராரெனமதியார்-கற்றறிந்தோரைக்

கற்றவாறறிகிலா ரெனமதியாமலும், [கற்றவாறறிந்தா ரென்றே மதிந்தும் ) உற்றுரை யன்னணை மோராமல்—உறவின, ரையும் உறவிலாரென்று அவ்வாறு நினையாமலும் ( உறவின ரென்றே நினைந்தும் ) அற்றார்கட்கு—பொருளில்லார்க்கு உண்டி—உணவும் மருந்தும், உறையுள்–உறையிடமும், உடுக் கை-உடையும், இவைபயின்று ஈந்தார்—இவற்றைக் கொடுத் தலையும் பழகுவோர், பண்டிதராய் வாழ்வார்—அறிவுடையோ ரென்று பிறரால் மதிக்கப்படுவார் எ—று.

பயின்று என்பதனை வாழ்வார் என்பதனோடு கூட்டில் உலகத்தோடு ஒத்து, எனப்பொருள் சொல்க. உலகமா வது உயர்ந்தோர், பேரறிவுடையோர். அவரோடு ஒத்திருத்த லாவது தாமுமவரே யாதல். ஆகவே பண்டிதரென்பது அடை மேலடையாய் வருமாதலின் பயின்று என்பதனை யீதலோடு கூட்டியது. விண்டவர் நூல் வேண்டாவிடும்; அயல அய லவர் நூல்; என எனையிடத்துங் கூறியது போல பண்டித ராய் வாழ்வாரென்றது. பண்டிதர்—சகலகலாவல்லவர். 9.

செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீய்ந்துசவும் - வெங்
கோல் அமைச்சர் தொழிலு மறியல மொன்றுற்ற
எனைத்து மறியாமை யான்.

இ-ள். செங்கோலான் செல்வமும்—முறைதவறாது அரசியற் றுவோனது செல்வத்தையும், கீழ்க்குடிகள் செல்வமும்— அவன் காலின்கீழ் வாழுங் குடிகளது செல்வதனையும், சீரி லாவெங்கோலான்வீய்ந்துகவும்—சிறப்பிழப்ப முறை தவறிய அரசனது கேட்டையும், கீழ்க்குடிகள்வீய்ந்துசவும்—அவன் காலின்கீழ்வாழுங் குடிகளதுகேட்டையும், வெங்கோலமைச் சர் வீய்ந்துகவும்...முறை தவறுமந்திரியர் கேட்டையும், தொ

ழிதும்-[அம்மந்திரியர் தொடங்கிய] வினை முடியாதடையும் கேட்டையும், அறியலம்— [எவ்வாறு நேர்ந்தனவென) அறியமாட்டோம், ஒன்று—ஒரு பொருளையேனும், எனைத் தும்...கொஞ்ச மென்கிறும், ஆற்ற—நன்றாய், அறியாமை யான்—அறியப்பொருந்தாமையான் எ-று.

கொடுங்கோன் மன்னருமவர் குடியும் அமைச்சும் கெடு வெதூஉங்,செங்கோலரசருமவர்குடியும்வாழ்வதூஉங்கண்ணு ரக் காண்கிறோம். ஆதலின் நன்மை நன்மைவிளைக்கும். தீ மை தீமைவிளைக்கும். ஆகவே இதைக் கண்டும் நீதி தவறு தல் எது கருதியோ அறியலம் என்பார் செங்கோலவர் செல் வமெய்தினர், கொடுங்கோலவர் கேடெய்தினர், ஆயினும் நம் எதுகாரணத்தாலென அறியலமென்றார். இது மகடூஉ முன்னிலைத்தாய்க் கூறிய சிறப்பிற்று. இனி செங்கோலர சர் செல்வம், அவர் குடிகளது செல்வம், அவரது அமைச்சர் கருமம் கை கூடல், வெங்கோலரசர் கேடு, அவர் குடிக ளது கேடு, அவரது அமைச்சர்கருமம் கைவராது கெடு தல், ஆக ஆறென ஆச்குவதற்கும் இடமுளதாதல் காண்க.

வீயந்து வீய் [ பகுதி ], த் [ சந்தி ], த் [ இறந்தகால இ டைநிலை ], உ [ வினையெச்சவிகுதி ], த் ந் ஆனது விகாரம்.

உகவு தொழிற்பெயர், உகு [ பகுதி, அ [ சாரியை ], வ் உடன்படுமெய் ], உ [ தொழிற்பெயர் விகுதி. உகரக் கேடு சந்தி.

உகு—உக்கு, உக, உகின், உக்க, உகுகின்ற, உகும், என வினை விகற்பங்கொள்ளும்- 10.

**அவாவறுக்க லுற்றான் றளரானவ் வைந்தின்**
**அவாவறுப்பி னுற்ற வமையும் - அவாவறான்**
**ஆகு மவனுபி னைங்களிற்றி னட்டுண்டு**
**போகும் புழையுட் புலந்து.**

இ—ள். அவாவறுக்கலுற்றான்—மனத்தின்கண்ணவாவி னையறுக்கும்படி துடங்கியவன், தளரான்—தன்னவாவின் றியே நிற்பான், அவ்வைந்தின் அவா அறுப்பின்—பொறி புலனாகிய நிலம், களாவேசம், மெய், பொருள், மேம்பட லென ஐவகைப்பட்ட பொருட்கட் செல்லுமவாவினையவிப் பானாயின், ஆற்றவமையும்-எல்லாக்குணங்களாலு மிக அமை வுடையவனாவன், அவன் அவாவருளுகு மாயின்—அவா வினைக்கெடா தொழிவானாயின், ஐங்களிற்றினாட்டுண்டு-ஐம் பொறியென்னுமதயானையால் அலைப்புண்டு, புழையுட்புலந் துபோகும்-நரகவாயிலுள் துன்பமுற்றுச் செல்லும் எ—று.

பொறி—மெய், வாய், கண், மூக்கு, செவி.
புலன்—ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை.

நிலம்—மண்ணாசை, களாவேசம்—பெண்ணாசை, மெய்—உடலாசை. பொருள்—பொருளாசை, மேம்படல்—புகழி ச்சை. ஆக ஐந்து. களம்—பெண் [wife] களத்திரம்.

அவாவறுத்தல், தளரா நிற்றல், ஐந்தின் அவாவறுத்தல், அமைதல், அவாவருமை, புழையுட் புகுதல், ஆக ஆறுபொ ருள் காண்க.

11

**கொலைக்களம் வார்க்குத்துச் சூதாடு மெல்லை**
**அலைக்களம் போர்யானை யாக்கும் - நிலைக்களம்**
**முச்சாரிகை யொதுங்கு மோரிடத்துமின்னவை**
**நச்சாமை நோக்காமை நன்று.**

இ—ள். கொலைக்களம்—யுத்தகளத்தும், வார்குத்துமெல் லை—தோல்வார்குத்திச் சூதாடுமிடத்தும், சூதாடுமெல்லை—க வருடிச்சூதாடுமிடத்தும், அலைக்களம்—[தண்ட முதலாயின வற்றால்) அலைக்குஞ் சிறைக் களத்தும், போர் யானை ஆக்

கும் நிலைக்களம்-யானைகளைப் போர்க்களத்துப் போர்செய்யப் பயிற்சி செய்யும் நிலையிடத்தும், முச்சாரிகை யொதுங்கு மோரிடத்தும்—யானை, தேர், குதிரை யான மூன்றுஞ் சாரிகை யோடுகின்ற எந்த இடத்தும், இன்னவை—அங்கங்கு முறையே நடக்கும் இத்தொழில்களை, நச்சாமை—விரும்பாமையும், நோக்காமை—போய்ப் பாராமையும். நன்று—நல் வினையாம் எ—று.

இடப்பொருளின் அத்துச்சாரியை யைகளம் முதலானவற் றோடுங் கூட்டுக.

எல்லையை வார்க்குத்தோடுங் கூட்டுக, குத்தும்என எச்சமாக்கி.

வார்க்குத்து என்பது மூன்று முழமுள்ள தோல் வாரை இரண்டாய் மடக்கி ஒன்றனை முழமாக்கிக் கொண்டு மத்தி மடிப்பைப் பிடித்து மடக்கி முடியக் கொண்டு வந்து, மடக்கு வாய் தெரியும்படி கீழே ஓர் பலகையில் சாரநிறுத்திய பின்னர் வார்க்குத்துப் பந்தயத்துக்கு வந்தவனை, மடிவாய் பார்த்துக் குத்தும்படி செய்து வைத்திருந்த ஓரிருப்பாணியைச் சொருகும்படி கையிற் கொடுத்தலும் அவன் அவ்வாறு செய்தவுடன், தோல் வார்க்காரன் ஓர் தந்திரஞ்செய்து தோலை உருவுவான். உருவும்பொழுது குத்தாணி மாட்டிக்கொள்ளும்படிக்கும் உருவக் கூடும். தோற் சுருள் ஆணியை விலகி வேறாகும்படியும் உருவக்கூடும். ஆணி தோலினது மடி வாயில் மாட்டிக் கொண்டால் ஜெயம், விலகி வேறானால் அபஜெயம். சூது—கவறு, பாச்சிகை. இவற்றை உருட்டித்தானே நிலைகொள்ள அவற்றின் மேலிருக்கு மெண்ணைப்பார்த்து அந்த எண்ணத்தின் தொகைக்குத்தக்கபடி ஜெயபராஜெயம்பெறுவர். பொதுவாய் எல்லாப் பந்தயத்துக்கும் சூதாட்டமெனப் பெயர் வழங்கும். இங்குகவறாடலாகிய சூதும், வார்க்குத்தாகிய சூதும் ஆக இரண்டும்

மற்றக் கொலைக்களம் அலைக்களம் நிலைக்களம் முச்சாரிகைக் களமாகிய நான்கனோடு கூடி ஆறு'தல் காண்க.

வார்க்குத்தும் ஓர் சூதாதலால் இரண்டனையும் சேர்த்தெ ல்லை கூறியது. 12.

விளையாமை யுண்ணாமை யாடாமை யாற்ற
உளையாமை யுட்குடைத்தா வென்று — களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கி னிவையாறும்
பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு.

இ-ள். ஆர் பூங்கோதாய்—பூநிறைந்த கூந்தலை யுடையாய், விளையாமை—(உழவால்) பயிர் விளைதலைச் செய்யாமையும், உண்ணாமை— (பொறிகளின்புற) உண்ணாமையும், ஆடாமை நீராடாமையும், ஆற்ற உளையாமை— (பிறர் சொன்ன கடுஞ் சொற்களுக்கு) மிகமன நோகாமையும், உட்குடைத்தா—நாணத்தகும் வருத்தங்களை, வென்று—வெல்லுதலோடு, களையாமை—(மேற்கொண்ட சீலங்களை யோம்பலரிதென்று) நீக்கா மையும், ஆறும்— (ஆகிய இவ்) ஆறும், நோக்கின்—ஆராயு மிடத்து, நூற்பட்டு—சாஸ்திரத்திற் சொல்லிய தரும நெறி யில் பொருந்தி நடந்து, பாற்பட்டார்—துறவின் பாற்சேர்ந்தா ரது, பண்பு—ஒழுக்கங்களாம் எ—று.

தவச்க்குரியதே நேரமாகலால், பயிர் விளைக்கிற தொழில் முதலிய துறவிகட்கடுத்த தன்று. நீராடாமை—புனல் விளை யாட்டு அல்லது ஜலக்கிரீடை புரியாமை. ஸ்நானமன்று.

ஆர் பூங்கோதா யென்னு மகடூஉ முன்னிலைக்கு, வண்டார் பூங்கோதா யெனவுரைத்தலு மொன்று. வண்டு—இசை யெச்சம். நூற்பட்டுத் துறவின் பாற் படலே,முறை வந்த ஞான மாதலானும் மற்றது பிறழினுமொருக் காலமைய மாதலானு

ம் எங்ஙனு மகவே முன்னிலைக்கு இத்துடச்சத்தனவாம் அடை கூறல் அரிதாதலானும் பிறவாற்றானும், நூற்பட்டுப் பாற்பட்டா ரென்றே அந்வயஞ்செய்து கொள்க.

உட்குடைத்தா என்பதை உள்-குடை-தா, எனப்பிரித்து மனதினின்று எழுந்து ஐம்பொறிகளையுங் குடைந்து கலக்காநின்ற குற்றம் அதாவது ஐம்புல நுகர்ச்சி எனினும்பொருந்தும். 13.

பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியாரினஞ் சேரான் — வையான்
கயலியலுங் கண்ணாய் கருதுங்காலென்று
மயல வயலவர் நூல்,

இ-ள் கயலியலுங் கண்ணாய்—பிறழுந்தன்மையால் கயலினது தன்மையைப் பொருந்துங் கண்ணாய், பொய்யான்—பொய்யுரையாமல், புலாலொடுகட் போக்கி—புலாலுண்ணுதலையும் கள்ளருந்துதலையுங் களைந்து, தீயன செய்யான்-தீவினைகளைச் செய்யாமல், சிறியாரினஞ்சேரான்— குடிப்பிறவாதாருடன் தோழமை கொள்ளாது, வையான்-பிறர்க்கின்னாதன [ஒருவன்] சொல்லுதலுமறப்பானாயின், கருதுங்கால் — ஆராயுமிடத்து, அயலவர் நூல்—பிறராற் சொல்லப்பட்ட நீதி நூல்கள், என்றும் அயல—அவனுக்கு எக்காலத்தும் பயனைத் தருமுரிமையினின்றும் அயலாயுள்ளனவாம் எ—று,

இவன் செயலே பயனைத்தரு முரிமையை யுடையதாதலால் பிறர் நூற் கேள்வி இவனுக்கு வேண்டாமை யாயிற்று.

கயலியலுங் கண்ணா யெனப் பாடாந்தரமுளதாயின்மை வாய்ந்து கயல் போற் பிறழுங் கண்ணாய் எனக் கூட்டுக.

கயலினது இயலைப் பொருந்துங் கண்ணாய் எனினும் பொருந்தும்.

ஆன்றோர் நூல்கள் இவனுக்கும் செய்யப் பட்டதெனக் கொள்ளற்க என்பார் அயல வயலவர் நூல் என்றார்.

ஆகவே இவ்வாறொழுகுவோனது பெருமை கூறப்பட்டது. 14.

கண்போல்வார்க் காயாமை கற்றாரினஞ்சேர்தல்
பண்போற் கிளவியார்ப் பற்றாமை - பண்போலும்
சொல்லார்க் கருமறைசோ ராமைசிறிதெனினும்
இல்லார்க் கிடர்தீர்த்தனன்று

இ-ள். கண்போல்வார்க்காயாமை—ஒருவன் தனக்குக்கண்போலும் நட்டாரிடத்துக் கோபம் பாராட்டாமையும், கற்றாரினஞ்சேர்தல்—கல்வி கேள்வியுடையா ரினத்தொடு கலத்தலும், கல்வி கேள்வியில்லாரோடு கலவாமையும், பண்போற் கிளவியார்ப் பற்றாமை—பண்ணினது இனிமை போலும் இனிமையைச் சொல்லிலுடைய அரிவையரை மிக அன்பு செய்யாமையும், பண்போலும் சொல்லார்க்கு அருமறை சோராமை—அவர்க்கு ரகஸியங்களை மறந்தேயு முரையாமையும், இல்லார்க்குச் சிறிதெனினு மிடர் தீர்த்தல்—வறியவர்க்குக் கூடிய சிறிதேனுமவர் துன்பங்களைதலும் (ஆகிய இவ்வாறும்) நன்று— நல்லகுணங்களாம் எ—று.

நன்று—என்னும் குறிப்பு வினை முற்று தனித்தனி காயாமை முதலியவற்றிற்கு பயனிலையாம்.

பண்—இராகம். கண்டம் யாழ்முதலியவற்றெழுவது. இல்லார்—ஒன்றுமில்லார், தரித்திரர்.

ஆற்றொழுக்காய் சிறிதெனினு மில்லாரொனக் கொள்ளின் பொருள் பங்கப்படுதல் காண்க.

கண்போலுதல்,—'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை' யாதலின் சிறந்த ஆப்தனையிங்கு கூறியது.

இல்லார்க்குச்சிறிதெனினுமிடர்த்தலென்பதை நசைவார்க்குக் கூடுவதீவானை என இவரே (34) ம் பாட்டிற் கூறியதாலுங் கண்டறிக.
கல்லாரினஞ்சேராமை, பொருளாற்றல்.
கிள—சொல், வினை
கிளவி—சொல், பெயர்
கிளவியார்-சொல்லார்-தொழிலடியாகப் பிறந்தபெயர். 15

துறந்தார் கட்டுன்னித் துறவார்க்கிடுதல்
இறந்தார்க் கினிய விசைதல் — இறந்தார்
மறுதலைசுற்ற மதித்தோம் புவானேல்
இறுதலில் வாழ்வே யினிது.

இ-ள். துறந்தார்கண் துன்னி-மனைத்துறந்த அருந்தவரைச் சேர்ந்து, துறவார்க் கிடுதல்—துறவாதார்க்கீதலைச் செய்து, இறந்தார்க் கினிய இசைதல்—கல்வியான் மிக்கார்க்கு இனியவற்றை மருவிச் செய்து, இறந்தார் மதித்தோம்பல்—தான் குடிப் பிறந்த குடியு ளிறநதார்க்குப் பாவனையால் நீர்க்கடன் ஓம்பி, மறுதலை சுற்றமதித் தோம்புவானேல்,-இன்னா செய்தாரையுஞ் சுற்றத்தாரையும் ஒருங்கு கொண்டும் அவர்கட்கு வேண்டுவன செய்வானாயின், இறுதலில் வாழ்வே யினிது—அநித்தியமாகிய இல்வாழ்க்கையே (துறவறத்தினும்) அவனுக்கு இன்பந்தருவது [எ—று.] துன்னி என்னுஞ்செய்து என்னும வாய்பாட் டெச்சம் இடுதல்; இசைதல் இவற்றின் முதனிலைகளோடு பொருந்தும். அப்பால் இசைதலோடு மதித்தோம்புவானேல் என முடிக்க.

வினையெச்சங்களெல்லாம் எந்த வினை விகற்பங்களோடும்

முடியும். துன்னி இடு, இடல், இடேல், இடுக, இட்டு, இட், இடின், இட்ட, இடாத, இடேன், இடாய், இடான் &c, &c.

மதி சிலேடை ... { பாவனை செய்தலும். ஒப்ப நாடலும்.

மறுதலை—மாற்றார்—இன்று செய்தார் என்பதை 'தன்னை மறுதலைபழித்தகாலையும்' என்பதிலும் காண்க.

மறுதலை—சுற்றம் — துறந்தார்— துறவார் — கல்வியின் மிக்கார்—தென்புலத்தார், என ஆறு பொருள் காண்க.

இல்வாழ்வே யினிது என்பதை.

"அறத்தாற்றினில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற் போஒய் பெறுவதெவன்" திருக்குறள். காண்க

வினைமுடிபிற்கேற்ப தொழிற் பேயரை வினைப்படுத்தி எச்சமாக்கின போதிலும் மூன்றும் வேற்றுமைத் தொகை யெனவே கொள்க. இவ்வாறே மூன்றும் வேற்றுமை யோடுருபு விரித்தும், விகாரத்தாற்றொக்க உம்மையை மதித்து என்பதோடு விரித்தும் பொருள் முதலிய பங்கப்படாது சொள்க. துறவாதார்-மற்றை ஆச்சிரமத்தினின்றொழுகு வோராகிய பிரமச்சாரி வானப்பிரஸ்தன் இவர்கள். 16.

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்ற லுடைமை - முடியோம்பும்
நாற்றஞ் சுவைகேள்வி நல்லாரினஞ்சேர்தல்
தேற்றனேற் றேறு மமைச்சு.

இ-ள். குடியோம்பல்-குடிகளைப் பாது காத்தலும், வன்கண்மை—அஞ்சாத வீரமும், நூல் வன்மை—பல நூலுங் கற்றுவந்த தீர்க்கஞானமும், கூடம்—வஞ்சனை யுடையனுத

ஆம், மடியோம்பு மாற்றலுடைமை—சோம்பு ( தன்னிடத்து வராது ) பாதுகாத்துக் கொள்ள வல்லவனாதலு ( மாகிய இவ்வைந்து குணங்களோடு ), முடியோம்பும் நாற்றம், சுவை, கேள்வி, நல்லாரினஞ் சேர்தல், தேற்றானேல்—அரசரால் விரும்பப்படும் போக போக்கியங்களைப் போன்ற சுகத்தை விரும்புதலுமொழிந்தானே யானால், (அவன்) அமைச்சு ( என ) தேறும்—அரசர்க் கமைச்சனாகத் தேறப் படுவான் ( எ—று ).

அறமும், மறமுந், திறமாக வுடையானென்பார், வன்கண்மை, கூடம், மற்றவற்றோடு அமைச்சரியல் பாகக் கூறினார் கூடம்., கூடகம்—வஞ்சனை. கூடஸ்தன்—அதிபதி.

அரசர், மதயானைபோலும், மந்திரியர் பாகனைப் போலுமாதலால், அரசர் வேண்டுமுணவு முதலியவற்றை இவரும் விரும்புதல் மறுக்கப் பட்டது. நாற்றம்—வாசனைத் திரவியங்கள். சுவை—நாவிற்கினிய அறுசுவை யுண்டி முதலியன. கேள்வி—கானத்தில் மகிழ்ந்து செவி கொடுத்துக் காலம்போக்கல். நல்லாரினஞ் சேர்தல்—கலவித்தொழில்.

நல்லார்—பெண்கள். போகம் எட்டு.

அரசனனையபோகமும், அமைச்சர்க்கு எளிதே கிடைக்குமாதலினவற்றிற் கிசையாமையை மந்திரியர்க் கழகெனக் கூறியது. அமைச்சர்க்கு ராஜ்ஜிய பரிபாலன விஷயத்தில் உள்ள கடமை கூறியவாறாயிற்று. தேறப்படுவான்—பிறரால் அறியப்பெறுவான். என—எச்சம். முடி—முடியையுடைய அரசர், இருமடி ஆகு பெயர்.

17

போகம்பொருள்கேடுமான்வேட்டம்பொல்லாக்கள்
சோகம் படுஞ்சூதே சொல்வன்மை - சோகக்
கடுங்கதத்துத் தண்ட மடங்காமைகாப்பின்
அடுங்கதமி லேனை யரசு.

இ-ள். போகமே—மகளிரோடு கூடி நுகரும் போகமும், பொருள்தேடட—தேடிய பொருளை பாதுகாவாது அழித்துக் கெடுத்தலும், மான்வேட்டமே-மான்வேட்டையாடுதலும், பொல்லாக்கள்ளே—தீமைவிளைக்குங் கள்ளினை நுகர்தலும், சூதே—சூதாடுதலும், சொல்வன்மை—வன்சொற் சொல்லுதலும், சோகக் கடுங்கதத்துத் தண்டமடங்காமை—தண்டத்தை பின்னை தருகின்ற மிக்க கோபத்தோடு தண்டித்தலின் கண்மட்டுப் படாமையும், காப்பின்— (அரசன் தன்னிடத்துப் படாது) காத்துக்கொள்வானாயின், ஏனையரசு—மாற்றரசரிடத்து, அடங்கதமில்—போர்க்கெழுந்துவந்து (அவனை) தாக்குதற்குக்காரணமாகின்ற கோபம் உளவாகா (எ-று).

துன்பந்தருஞ் சூதாடுதலும் எனக்கூட்டுக. மாற்றரசர்—பகையரசர், மேற்கூறிய எழுகுணங்களில் ஒவ்வொன்றும்பகையரசரது துன்பத்தை வருவிக்கப்போதுமானது காண்க.

யாதொரு துன்பமுஞ் செய்யாத தாதலால் மானை வேட்டையாடல் மறுக்கப்பட்டது. சூது—பொது. அடங்கல், ஒடுங்கல், மட்டுப்படல். இதில் எழு பொருள் கூறியது ஏலாதியறுபொருளோடு கண்ட சருக்கரையுங் கூட்டல் ஒரோவிடத்து மரபாகலின். ஏலாதி-ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆக ஆறு. கண்ட சருக்கரை சேர்த்து எழுமாகும். 18.

கொல்லான் கொலைபுரியான் பொய்யான்பிறர்மனை
செல்லான் சிறியாரினஞ்சேரான—சொல்லும் [மேல்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிவை,

இ-ள். கொல்லான்—(ஒருயிரையும்) கொல்லாமையும், கொலைபுரியான்— (பிறர் செய்யும்) கொலைக்கும் உடன்படா

மையும், பொய்யான்—பொய்யுரையாமையும், பிறர் மனைமே
ற்செல்லான்—பிறர் மனையாளிடத்து (மனதினாலுஞ்) செ
ல்லாமையும், சிறியாரினஞ் சேரான்—கீழோரோடு பழகாமை
யும், சொல்லுமறையிற் செவியிலான்—(தானறியின் பிறர்
நோதற்கிடமாகும்) இரகசியச்சொல்லுக்குச் செவியின்மை
யும், தீச்சொற்கண்மூங்கை—[தான் சொல்லின் பிறர் நோ
தற்கிடமாகும்] கடுஞ்சொல்லுக்கு வாயின்மையும், [ஆகிய]
இவை—இந்நல்ல குணங்கள், இறையிற் பெரியார்க்கு—முத
ன்மைக்குணமுடைய பெரியோர்க்கு (உரியன) எ—று.

ஏழாவது தருமத்தைப் பெயராகக் கூறியும் ஏழையும் இ
வையெனச் சுட்டியும் பாடியதால் இவற்றிற்கேற்பக் கொ
ல்லான் என்றது முதலானவற்றை கொல்லானது செயல்
அதாவது கொல்லாமை முதலனவாகவுணர்த்து முடிவு செய்
துகொள்க,

மறை—முதனிலைத்தொழிலாகுபெயர். ரகஸியத்துக்கும்
வேதத்துக்குமதுவே முதனிலை. 19.

**மின்னே ரிடையார்சொற் றேறான்விழைவோரான்**
**கொன்னே வெகுளான் கொலைபுரியான் - பொன்னே**
**உறுப்பறுத்தன்ன கொடையுவப்பான் றன்னின்**
**வெறுப்பறுத்தான் விண்ணகத்துமில்,**

இ-ள். பொன்னே—திருமகளே, மின்னேர்இடையார்சொற்
றேறான்—மின்னினது துவளுதலைப்போன்ற துவளுதலையு
டைய மருங்குலாரது வார்த்தையில் தெளிவு பொருந்ாதவ
னும், விழைவுஓரான்—காமநுகர்ச்சியினை நினையாதவனும்,
கொன்னேவெகுளான்-பயனின்றிச் சினஞ்செய்யாதவனும்,
கொலைபுரியான்—ஒருயிரையும் கொலை மேவாதவனும், உ
றுப்பறுத்தன்ன கொடையுவப்பான்— பிறர் பயன் கருதித்

தன் உறுப்பினுளொன்றுசேட்பக் கொடுத்ததுபோலும் அருமையான கொடையைவிரும்பிக்கொடுப்டவனும், தன்னின்வெறுப்பறுத்தான்—தன்மனதின் கண்ணுள்ள முனிவை யகற்றியவனும் ஆகிய ஒருவன், விண்ணகத்துமில்—விண்ணுலகத்தினுங் கிடைத்தலில்லை எ—று.

விண்ணகத்தும் மண்ணகத்து மென்க கூட்டுக.

சிபிச் சக்கிரவர்த்தி, ததீசி மஹாரிஷி, கண்ணப்பர், மூழங்கையைச் சந்தனத்துக்காக வுரைத்தமூர்த்திகள், கன்னன். இவரிடத்து உறுப் பறுத்தன்ன கொடை காண்க.

"அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்புடையார்,
என்புமுரியர் பிறர்க்கு" (திருக்குறள்). 20.

இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும் - உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினுய்
வீடே புரிதல் விதி.

இ-ள். பால் போலுஞ் சொல்லினுய்—பாலினிது இனிமைபோலும் இனிமையையுடைய சொல்லாய், இளமை கழியும்—இளமைப் பருவம் (நில்லாது) கழியும், பிணி மூப்பு இயையும்—நோயும் முதிர்பருவமும் வந்து சேரும், வளமை வலி இவை வாடும்—செல்வமும் தேக பலமும் மெலியும், (ஆதலின்) உளநாளால் — (தான்) உள்ள நாளின்கண்வரும், பாடேபுரியாது (இவ்வைந்தானும் வரும் துன்பத்தையே) யநுபவிக்க விரும்பாமல், வீடே புரிதல் விதி—மோக்ஷத்தைப்பெறுதலையே விரும்புதல் யாவர்க்கும் நெறியாம் எ-று.

இவை, பிணி மூப்பாகிய இவை எனவுங்கூட்டுக.

நாளால்—ஏழாம் வேற்றுமை மயக்கம்.

"நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர்
குழவியிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னுவிளமை மகிழ்ந்தாரோ கோலூன்றி
இன்னுங் கெழுந்திருப்பார்." நாலடியார். 21

வாளஞ்சான் வன்கண் மையஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சா னாய்பொருளானஞ்சான - நாளெஞ்சாக்
காலன் வரவொழிதல் காணின் வீடெய்திய
பாலினூ லெய்தப்படும்.

இ-ள். வாளஞ்சான்—வாளுக்குமஞ்சாதவன், வன்கண் மையஞ்சான்-தறுகண்மைக்குமஞ்சாதவன், வனப்பஞ்சான்-தோற்றப் பொலிவிற்குமஞ்சான், ஆளஞ்சான்-படையாளனென்றஞ்சான, ஆய்பொருளானஞ்சான்—ஆராய்ந்தே யீட்டப்படும்பொருளினையுடையவனென்றஞ்சான் (ஆயினும்) நாளெஞ்சாக்காலன்வரவு—குறித்த நாளில் வருதற்கு மறத்தலையொழியாத காலனது வரவினை, ஒழிதல் காணின்—(அஞ்சாமல்) ஒழித்தற்கு (உபாயம்) காண்பானாயின், வீடெய்திய—மோக்ஷநெறியைப் பொருந்தும், பாலினூலெய்தப்படும்—தன்மையையுடைய நூல்களைச் சாரத்தகும் எ—று.

வாள் முதலிவைந்துபொருட்குமஞ்சாதவனுங் காலனுக்கு அஞ்சாது நிற்றலமையாது வீடெய்திய பாலினூலெய்தாக் கடையென்பது கருத்து. நூலெய்தலோடு அறுபொருள் காண்க.

தறுகண்மை—அஞ்சாதவீரம்-அஞ்சாவீரததுக் கஞ்சாமை யாவது ஒன்றிற்கு மஞ்சாத சுதத வீரனுக்குந்தா னஞ்சாதி மேற்கொள்ளல்.

இத்தன்மை யாலுங் காலனை வெல்லுதல் கூடாது.

காலனையுமஞ்சாது வெல்லவேண்டுமெனின் வீடெய்திய பாவினால் எய்த வேண்டுமென்பது கருத்து. 22.

குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமுநோக்கான்
மணநோக்கான் மங்கலமுநோக்கான்-கணநோக்கான்
கால்காப்பு வேண்டான் பெரியோர்நூல் காலற்கு
வாய்காப்புக்கோடல்வனப்பு.

இவ்வெண்பா

காலனுக்குத் தன்சமயம் வந்து விட்டால், பிறரது எந்தச் சமய முதலானவற்றையும் பாராதாதலால் அவன் வரும் வழியை யடைத்தற்குக் கருவியாகிய பெரியோர் நூல் வழித்தேர்ந்துவிட வேண்டுமென்னுங் கருத்துடையது.

(இ-ள்). காலன்-காலனென்பவன் (ஒருவனுக்கு மரணகாலம் வந்து விட்டால் அவன்) குணநோக்கான்—குணமுடையவனென்று பாரான், கூழ்நோக்கான்—செல்வமுடையானென்று பாரான், கோலமுநோக்கான்—அழகாயிருக்கிறானென்றும் பாரான், மணநோக்கான்—கலியாணஞ் செய்தானென்றும் பாரான், மங்கலமுநோக்கான்—புண்ணியஞ் செய்யா நின்றானென்றும் பாரான், கணநோக்கான்—சுற்றமுடையானென்றும் பாரான் (ஆதலால்) கால்காப்பு வேண்டான்—தன் மக்களது சவரக்ஷணையை விரும்புதலொழிந்துபெரியோர் நூல—பெரியோரால் செய்யப்பட்ட ஆகமத்தை (அவற்கு)வாய் காப்புக்கோடல்—அவன் வரும்வழியை அடைத்து வைக்கும் வேலியாகக் கொள்ளுதல், வனப்பு—(ஒருவனுக்கு) அழகாகும் (எ-று).

காலற்கு என்றிருந்ததை, காலன் என்றும் அவற்கு என்றும் பிரித்தமை காண்க.

1. குணநோக்கான், 2. கூழ்நோக்கான், 3. கோலநோக்கான், 4. மணநோக்கான், 5. மங்கலநோக்கான், 6 கணநோக்கான்.

வாய்—வழி. வாய்காப்பு-வரும் வழியை யடைத்தல். கோடல்—கொள்ளுதல். காலன் வராதபடி காத்தற்குக் கருவியாயுள்ளதைக் கொள்ளல். காப்பு-ஆகுபெயர். காப்பு வேண்டான்—முற்றெச்சம். மற்றப் பாட்டினுங் காண்க.

கால்—சந்திரு, காலகாப்பு—இத்தொடர்மொழி சவரக்ஷ ணைக்கு வரும். இது கால் பார்த்தல் எனவும் வழங்கும். குண நோக்கான் முதல் கணநோக்கான் வரையுள்ள வினைமுற்று கட்கு வினைமுதல் காலன். கால் சர்ப்பு வேண்டான் முதலுள் ளன வற்றிற்கு வினைமுதல் வாய் காப்புக கொள்ளுமொரு வன். வினைமுதல்—காத்தா. 23.

பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவி னிரப்பிவை தாழா - அணியின்
அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றும்
நிரம்புமேல் வீட்டு நெறி.

(இ ள்) பிணி-நோயும், பிறப்பு-ஜென்மமும், மூப்பு முதிர்பரு வமும, சாக்காடு—மரணமும, துன்பம்—வருத்தமும, தணிவி ல் நிரப்பு—அடங்காத தரித்திரமும், [ஆகிய] இவை தாழா—இவை பாறு நீட்டியாது வரும், (ஆதலினால்) அரங்கின் மேல்—நாடக சாலையில், அணியின்—கோல வேறுபாட்டினாலே, ஆடுநர்போல்—வந்தாடுகிற கூத்தனைப்போல், ஆகாமல்—(உ லகத்தில் அநேக ஜென்மங்களை யெடுத்துத் துன்பத்துக்கு ஆள்) ஆகாமல், வீட்டு நெறி நிரம்புமேல்—மோக்ஷத்துக்கு ரிய நன்மார்க்கம் வந்தடையுமாயின், நன்றும்—நல்லதாகும் (எ-று).

ஒடுருபை அறுபொருளோடுங் கூட்டுக, நிரம்புதல் (எழு வாய்), பயனிலை—நன்றும்.

நீட்டியாது—தாமதியாமல். கோலவேறுபாடு—அநேக வித மான வேஷங்களோடு தொன்றுதல். கூத்தர்—நாடகக்காரர் கூத்து (பகுதி). ஆடுநர்—ஆடு (தொழிற்பெயர்), ந் (பெயரி டைநிலை), அர் (பலர்பால் விகுதி). தாழா—அஃறிணைப்பல வின்பால் படர்க்கை யிடத்து தன்வினைச் செய்வினையாகிய செயப்படு பொருள் குன்றிய எதிர்மறை வினைமுற்று. தாழ் (பகுதி), ஆ (பலவின்பாற் படர்க்கைப் பொருளும் எதிர்ம றைப்பொருளுந் தரும் விகுதி). 'ஆவே எதிர்மறைக் கண்ணது தாகும்' பலவின் படர்க்கையில். 24.

பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகஞ் ' மை நாடுங்கால் - நாடகம்
சேர்ந்தா . நபழி தீசசொல்லே சாக்காடே
தீர்ந்தார் போற்றீரா வரும்.

(இ-ள்) .பாடகஞ்சாராமை-பாடமிடஞ் சேர்தலொழிக, பாத்தி லார்தாம் விழையும நாடகஞ்சாராமை-பொதுமகளிர் விரும்பு கிற ஆடுமிடஞ் சேர்ந்து காணுதலொழிக, நாடுங்கால்—ஆராயு மிடத்து, நாடகஞ் சேர்ந்தார—ஆடுமிடஞ்சாணிய சென்றோ ர்க்கு, (வந்தே தீர்ந்த) பகைபழிதீச்சொல் சாக்காடு—டகை யையும் பழியையும் புறங்கணிப்பையும் மரணத்தையும், தீர்ந் தார்போல்—விட்டு நீங்கினவர்போல் (அங்கு சென்று பயில் வோர நிற்ப) தீராவரும்—அவை அவரை விட்டு நீங்காது வந்தடையும் (எ-று).

பாத்து—பங்கு, பாகம். பாத்திலார்—ஒருவன் பங்கிலிலார், பொதுவாயுள்ளவா, பொது மகளிர், வேசியர். முன்னரே நா டகஞ்சேர்ந்தார்கு வந்தடைந்த டகை பழி தீச்சொல் சாக்கா டாமிவை தாங் கண்டிருப்பத்தமக்குவந்தடைதல் தீர்ந்தா போலிவர் அங்குசென்று பழகினும், அவை வந்தே யடையு மெனக்கொள்க.

சாராமை முதலியன எதிர்மறை வியங்கோள் வினை முற்று. 25.

**மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை**
**ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் - பூண்ட**
**கால மறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு [மைந்த**
**ஞால மறிந்த புகழ்.**

(இ-ள்). மாண்டமைந்தார் ஆய்ந்த மதி-மாட்சிமைப் பட்ட நல்லொழுக்கம மைந்தார் ஆராய்ந்தமதியுடைமையும், வனப் பு-தோற்றப்பொலிவுடைமையும், வன்கண்மை-பகைவர்க்கஞ் சாத்தறுக்கண்மையுடைமையும், ஆண்டு அமைந்த கல்வி— தேர்ந்கல்வியும், சொல்லாற்றல்— (மாற்றரசர் மனங்கொ ள்ளப் பெற்றியறிந்து) சொல்லும் வன்மை யுடைமையும், பூண்டமைந்த காலமறிதல்— (தௌத்தியம்) செல்லத்தகுந் தகாலத்தை யுணர்தலுடைமையும், (ஆகிய இவை) கருதுங் கால்—ஆராயுமிடத்து, தூதுவர்க்கு ஞாலமறிந்த புகழ்—தூது சொல்வோர்க்கு ஞாலமறிந்த புகழைத் தருவதாம் (எ-று).

மாண்டு—(மாண்) பகுதி, ட (இறந்தகால இடைநிலை), உ (வினையெச்ச விகுதி).

ஆண்டு—ஆள் (பகுதி), ட் ( இறந்தகாலஇடைநிலை ), உ ( வினையெச்சவிகுதி ). ள், ட். ஆனது சந்தி, ட், ண், ஆனது விகாரம்.

தௌத்தியம்—தூதவர்செயல்.

தறுகண்மை—அஞ்சாத வீரம் வேற்றரசர் கோபித்துப் பார்த்தன் முதலிய செய்யுங்காலத்து.

காலமறிதல்—வேற்று வேந்தா சமையமறிதல்.

"அறிவுருவாராய்ந்தகல்வி யிம்மூன்றின், செறிவுடையான் செல்கவினைக்கு" திருக்குறள். 26.

**அஃகுநீ செய்ய லெனவறிந்தா ராய்ந்து**
**வெஃகல் வெகுடலே தீக்காட்சி—எஃகுமேல்**
**கள்ளத்த வல்ல கருதினிவை மூன்றும்**
**உள்ளத்த வாக வுணர்.**

வெஃகலை அஃகு, வெகுடலைநீ, தீக்காக்ஷியை செய்யல், என அறிந்தாராய்ந்து ( ஒருவன் ) எஃகு மேல், இவைமூன்றும் உள்ளத்தவாகவுணர் கருதின் கள்ளத்தவல்ல. என அந்வயஞ்செய்து கொள்க.

(இ-ள்). வெஃகல்-(பிறன்பொருளை) விரும்பலை, அஃகு-குறை [செய்யேல்]. வெகுடல்-கோபஞ்செய்தலை, நீ-நீக்கு, தீக்காக்ஷி—தீமையைத் தருகின்ற கண்காக்ஷிகளை செய்யல்—பார்த்தலைசெய்யேல், என அறிந்து ஆராய்ந்து எஃகுமேல்—என்று அறிந்து ஆராய்ந்து [ ஒருவன் ] சொல்வானேல், இவை மூன்றும்—இம்மூன்று தருமங்களையும், உள்ளத்தவாக வுணர்—உன்னுடையமனதின் கண்ணிகழும் நற்றொழிலாக வுணர்ந்து கொள்வாயாக, கருதின்—ஆராயுமிடத்து, கள்ளத்தவல்ல-[ இவ்வாறு இடித்து சொல்லும் சொற்கள் ] வஞ்சனையுடையன வல்லனவாம் (எ-று),

இது நேரிசை நிலைப் பொருள் கோள்.

| | | |
|---|---|---|
| 1 வெஃகல். | } | இவற்றை நீக்கு. |
| 2 வெகுளல். | | |
| 3 தீகாக்ஷி செய்தல். | | |

4. வெஃகாமை.
5. வெருளாமை.
6. தீக்காசுதி செய்யாமை.
} இவற்றைக் கொள்.

ஆக ஆறு பொருள்:

நீ—நீக்கு. இதை நீத்து, நீவி, நீவ, நீப்பின், என வினையெச்சமாகவும் நீத்த, நீக்கின்ற, நீவும் எனப்பெயரெச்சமாகவும் வினை விகற்பஞ்செய்து கொள்க.

எஃகு எனனுஞ்சொல், எகு, எழு, எழுகு, எனவும் வழங்கும். இங்கு [பஞ்சுவெட்டித்தெளி] என்னும் பொருளதின்னின்று வந்தது. பருத்தியைக் கொட்டை கொத்தைநீக்கித் தெளிப்பதுபோல் ஒருவனிடத்துள்ள செயல்களைத் தெளித்து நல்லறிவு கூறுதற்கண் இது வந்தது காண்க. 27.

**மையேர் தடங்கண் மயிலன்ன சாயலாய்**
**மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பார் - பொய்யே**
**குறளை கடுஞ்சொல் பயனில்சொ னான்கும்**
**மறலையின் வாயினவா மற்று.**

(இ-ள்). மையேர் தடங்கண் மயிலன்னசாயலாய்-இயல்பிலேயேவாய்ந்தமையும் அழகும் விசாலமுங் கொண்ட கண்ணையும் மயிலினது சாயல்போன்ற சாயலையுமுடையாய், மெய்யேயுணர்ந்தார் மிகவுரைப்பார்—அறிவுடையார்தாமெய்யே யுரைப்பார், பொய்—குறளை—கடுஞ்சொல்—பயனில்சொல் (ஆகிய) நான்கும், மறலையின் வாயினவாம்—புல்லறிவாளரது வாயில் வருவனவாம், மற்று— [ ஆதலின் அவை நீத்து ] மெய்யேயுரை. (எ-று)

மிகவுரைப்பார், மற்றென்னுஞ் சொல்லாற்றலிற் கிடைத்த மெய்யே யுரை, என்னுமிரண்டிடுனேடு வெளியாக்கிடக்கு நான்கையுங்கூட்டி அருக்குக.

சாயலுடையாளே உரை எனக் கூட்டுக. குறளை—புறங்கூறல், பயனில்சொல்—பயனற்றசொல்லிசைத்தல். 28.

**நிலையளவி னின்ற நெடியவர்தா நேராக்**
**கொலைகளவு காமத்தீ வாழ்க்கை—அலையளவி**
**மையெனநீள்கண்ணாய் மறுதலையர் மிம்மூன்றும்**
**மெய்யள வாக விதி.**

(இ-ள்). அலையளவி— அலைத்தலை மேவி [அதாவது] நோய் செய்யுந்தன்மையைப் பொருந்தி, மையென நீள்கண்ணாய்— கடலென்று சொல்லும்படியான நீண்ட கண்களையுடையாய், நிலையளவில் நின்ற நெடியவர் தாம்—தங்களுக்குச் சொன்ன நிலையளவின் கண்ணே நின்ற பெரியோர், நோக் கொலைக ளவு காமத்தீவாழ்க்கை ஆம் இம்மூன்றும்—உடன்படாத கொலை களவு, சிற்றின்பத் தீப்படுதல் [ ஆகிய ] மூன்றும், மறுத[illegible]யாமிம்மூன்றும்-இவற்றின் மாறாகிய கொல்லாமை களவு மேவாமை, சிற்றின்பத்தீயிற் படாமை ஆகியமூன்றும் இவ்வாறும்) மெய்யளவாக விதி—உடம்பின் தொழிலாக விதிப்பாயாக [எ-று].

மை—நீர், இங்கு தானியாகுபெயராய்க் சடலுக்காயிற்று.

ஆகவே உடம்புள்ள காலத்திற்றான் விதியாயுள்ள நற்கருமங்களையும் விலக்காயுள்ள தீக்கருமங்களையும் ஒருவன் செய்யக்கூடும் இதில் நற்கருமங்கள் சொர்க்காதிபோகங்களைத் தரும், தீக்கருமம் நரகிற் சேர்க்கும். ஆதலால் நல்லதைச்செய்ய வேண்டுமென்பது கருத்து.

தீயனவாகிய கொலை களவு காமம் புரியும் ஒருவன்தானே நல்லனவாகிய கருமங்களையுஞ் செய்கிறவன் ஆவன். நல்லன செய்கிறவனென்று ஒரு தனிச் சாதியானில்லையாதலால் மறுமையில் துன்பம் பயக்கும் தீயனவற்றை ஒழித்து நல்லனவற்றைச் செய்தல் வேண்டும் என்றறிக

அலையளவி-சிலேடை

கடலுக்கு அடையாய் அலைகள் பொருந்தி யிருத்தலும், கண்ணுக்கு அடையாய் நோய்செய்யுநதன்மை பொருந்தலும்.

ஆம் இமமூன்றும் என்பதனை மூன்னுங் கூட்டுக.

கண்ணையுடையவளே விதிப்பாயாக எனக்கொள்க. 29.

மாண்டவர் மாண்ட வறிவினான் மக்களைப்
பூண்டவர் போற்றிப் புரக்குங்கால் - பூண்ட
உரதனை க்ஷேத்திரன் கானீநன் கூடன்
கிருதன் புநர்ப்பவன் பேர்.

(இ-ள்). மக்களைப் பூண்டவர்-மக்களைப் பெற்றவர், போற்றிப் புரக்குங்கால்-அம்மக்களை ஆதரித்துப் பாதுகாக்குமிடத்து, மா

ண்டவர்—மாட்சிமைப்பட்ட அறிவினையுடையோர், மாண்ட அறிவின்—தங்கள் பேரறிவினால், பூண்டபேர்— அம்மக்களாவார்க்கு இட்ட பெயர்களாவன:—

உரதன், கேத்திரன், கானீனன், கூடன், கிருதன், புனர்ப்பவன் முதலியவாம், இவை வடமொழித் திரிபு நாமங்கள்.

இப்பெயர்களின் வரலாறென்னை யெனின்:—

1. உரதன்—கணவனிடத்தே பெற்ற பிள்ளை.
2. கேத்திரன்—கணவன் ஏவலினாலேனும் குரு ஏவலினாலேனும் பிறனொருவனிடத்துப் பெற்ற பிள்ளை.
3. கானீனன்—தீ வேட்டு மணம் புரியுமுன் தாய் வீட்டிற் பெற்ற பிள்ளை.
4. கூடன்—மணம் புரிந்தபின் கணவன் வீட்டில் அவனுக் கொளித்துப் பிறனொருவனிடத்துப் பெற்ற பிள்ளை.
5. கிருதன்-தானே வந்து அடைக்கலம் புகவளர்த்த பிள்ளை.
6. புநர்ப்பவன்—கணவனிறந்த பின்னர் வேறொருவனுக்குத் தான் மனையாளாகியவனோடு பெற்ற பிள்ளை.
அவ்வாறு வேறொருவனை மணந்த பின்னிவனை யொளித்துப் பிறனிடத்துப் பெற்ற பிள்ளையையுங் கூடனென்றே கொள்க.

இவையே வரலாறென்க.

இவ்வெண்பா கூறியது யாது கருதி யெனின், குலன், குடிமை, உயர்வு, தாழ்வு முதலியவற்றாற் செருக்கடைந்து அவற்றை யெடுத்துப் பேசுவோர் நாவிற்குப் பூட்டிடுதற்சென்க. இஃதன்றியும்; கண்ணின்று கண்ணற இடித்துச்சொல்லும் கணிமே தாவியார் இன்னுங் கூறுவார், 30.

மத்தமயிலன்ன சாயலாய் மன்னியசீர்த்
தத்தன் சகோட னபவித்தன் — புத்திரி
புத்திரன் பொய்யில் கிரீத னுபகிருதன்
இத்திறத்த வெஞ்சினோர் பேர்.

(இ-ள்). மத்தமயிலன்ன சாயலாய்-செழித்த மயிலினை யொத்த சாயல்போலுஞ் சாயலையுடையாய், எஞ்சினோர் பெயர்—கூறுது மீந்தவர்களுடைய பேர்களும், தத்தன், சகோடன், அபவித்தன், புத்திரி புத்திரன், கிரீதன, உபகிருதன், (என்னும்) இத்திறத்த—இவ்வகையேயுள்ளனவாம்.

மன்னிய&c—நிலைபெற்ற சிறப்பினையுடைய தத்தன் எனவும், பொய்யில்&c—பொய்த்தற் கிடமில்லாத கிரீதன் எனவுங் கூட்டுக. இந்த விசேஷணங்களின் பொருளாற்றலை வரலாற்றாற் காண்க.

வரலாறு:—

1. தத்தன்—பெற்றோர் மனசாரத்தர, மகவிலார் வாங்கி வளர்த்த பிள்ளை.

2. சகோடன்—மணம் புரியாமுன்னர் தன் தாய் வீட்டில் வைத்துக் கருப்பவதியாயுடனே ஒரு கணவனை மணந்துஅப்பால் பெற்ற பிள்ளை.

3. அபவித்தன்—பெற்று அநாதரவாய் விடுத்துக்கிடப்ப மற்றவர் எடுத்து வளர்த்த பிள்ளை.

4. புத்திரி புத்திரன்—தன் மகளிடத்து மருகன் பெற்றுத் தரத்தான் வாங்கி வளர்த்த பிள்ளை. மருகன்—மருமகன்; மகளை மணந்தோன்.

5. கிரீதன்—சந்ததியில்லாதவர் விலைகொடுத்து வாங்கி வளர்த்த பிள்ளை.

6. உபகிருதன்—சொந்தப் பிள்ளையாக ஒப்புக்கொள்ளப்பட்டு, ஒருவர் சவரக்ஷணையில் வளர்ந்த பிள்ளை. அபிமானபுத்திரன்.

இவ்வாறென்க.

உம்மை விகாரத்தாற்றொக்கது. பெயரும்—எழுவாய் இத்திறத்த-பயனிலை: திறத்த—திறம் என்னும் பண்படியாகப்பிறந்த அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

திறம்-பகுதி; அத்து—சாரியை, அ—பலவின் படர்க்கை விகுதி. உகரக்கேடு சந்தி 'மவ்வீறொற்றழிந்து உயிரீறொப்ப' திற-எனநிற்க, 'அத்து முன்னகர மகரமுனையில்லை'. யென்றவிதிப்படி—அ-கெட்ட அத்துச்சாரியை புணர்ந்து-திறத்து' எனநின்று விகுதி, அ—புணருமிடத்து, 'உக்குறள் மெய்விட்டோடி' திறந்த்-அ-எனநின்று உடல்மேலுயிர் வந்தொன்றுவதியல்பே, என்றவிதிப்படி 'திறத்த' எனநின்றது.

இவ்வாறு புத்திரோற்பத்தி செய்து கொள்ளலில் பெரும்பான்மைய இந்த யுகத்தில் மறுக்கப்பட்டன. 31.

உரையான் குலன்குடிமை யூனம் பிறரை [ய்
உரையான்பொருளொடுவாழ்வியாவும் — உரையாது
பூவாதிவண்டு தேர்ந்துண் குழலா யீய்த்துண்பான்
தேவாதி தேவனுத் தேறு,

(இ-ள்). பூவாதி வண்டு தேர்ந்துண் குழலாய்-வண்டுகள் திரிந்துவந்து பூ முதலியவற்றுள்ள தேனாராய்ந்துண்ணுதற்கிடமாகிய கூர்தலையுடையாய், அல்லது பூ வண்டு முதலாகிய எல்லா வண்டுகளுந் தேனுராயத் திரிந்து வந்துண்ணுதற் கிடமாகிய கூர்தலையுடையாய், பிறரை குலன்குடிமையுரையான்— மற்றோருடைய குலத்தையுங் குடியையும் பற்றிப்பேசாதவனுகி, ஊனம் உரையான்—அவரது குலத்தின் கண்ணூனத்தையும் குடியின் கண்ணூனத்தையும் பற்றி வாய் விடானுகி, பொருளொடுவாழ்வு யாவுமுரையானும்-பிறரது செல்வத்தைப்பற்றியும் மாடு மக்கள் முதலிய சம்பத்தைப் பற்றியும் ஒன்றுங் கூருனுகி, செல்வத்தின் கண்ணூனத்தையும்—சம்பத்தின் கணூனத்தையுமெடுத்து இசையானுகி, ஈய்த்துண்பானேல்—தன்னிடத்திலுள்ளதைக்கூடிய அளவு இரப்போர்க்குக் கொடுத்துத் தானும் அனுபவிப்பானேயானல், தேவாதி தேவனுத்தேறு—முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கு முதலாய தேவனென்று மதி [எ—று].

குலன்—நற்குலம், குடிமை-வான் குடிப்பிறப்பு, எனக்கூட்டுக. ஊனம், இடைநிலைத் தீவகம்.

குலன்—மகரம் னகரத்தோடொத்து க்குலன் என வந்த போலி. இது சமனுக்ஷரம் அல்லது சமனுக்கரம் என்று வடமொழியில் வழங்கும்.

ஆறுபொருள் வெளி,

1. குலனுரையாமை,
2. குடியுரையாமை,
3. அவற்றூனமுரையாமை,
4. பொருள் வாழ்வுரையாமை,
5. அவற்றூன முரையாமை.
6. ஈய்த்துண்ணல்,

பொருளும் வாழ்வும் பிரித்தேழுபொருள் காட்டிக் கண்ட சருச்சனை கூட்டலாகாதோவெனின், பொருள் வாழ்வு

யாவுமென்று கூறியிருத்தலாலும் பொருளால் வருவதே வாழ்வு யாவுமாதலாலும் பிரித்தல் ஆகாதென்க.

இந்நூலில் முற்றெச்சமாதல் பெரும்பான்மையாயிருத்தல் ஆய்ந்துகொள்க. முந்திய இரண்டு பாட்டுங்கூறிய காரணமே குலன் குடிமை பேசக்கூடாதென்பதை இப்பாட்டில் இடித்துச் சொல்லுதற்கு. பொருள் வாழ்வும் குலன் குடிமையினது இருமாப்பு செம்மாப்புக்குக் காரணமாய் சம்பந்தப்பட்டிருப்பதால்அதையும் இங்குச்சேர்த்துக் கூறியது. 32.

"சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி."

எனப்பிறர் சுட்டிக்காட்டலு மித்தன்மையது.

**பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்**
**மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான் - எய்யு**
**ரையான்,கூந்தன்மயிலன்னாய்குழீஇயவான் விண்ணோ**
**ர்க்கு, வேந்தனா மிவ்வுலகம் விட்டு.**

(இ-ள்). கூந்தல்மயிலன்னாய்—விரிதோகையன்ன கூந்தலையுடையாய், பொய்யுரையான்-பிறர்தீங்குகருதி உண்மையும் பேசானாகி, உள்ளனவும் விட்டுரையான்—தன்னிடத்திலுள்ள பொருள் முதலியவற்றையும் பற்றி வாய்விட்டுப் பேசுதலொழிந்து, எய்யுரையான்—(எவ்வமாகிய) தன்னிடத்தொன்றுமில்லாமையாகிய குறையையுமுரையாத ஒருவன், இவ்வுலகம் விட்டு—இப்பூவுலகத்தைப் புகழோடு நீத்து, வான்—வானுலகத்து, குழீஇயவான் விண்ணோர்க்கு—நிரைந்து கூடியிருக்கிற தேவர்களுக்கு, வேந்தனும்—இந்திரன் ஆவான் (எ—று).

| | |
|---|---|
| 1. பொய்யுரையாமை. | 4. மெய்யுரையாமை. |
| 2 வையாமை. | 5. உள்ளனவுங்கூறாமை. |
| 3 புறங்கூறாமை. | 6. இல்லனவுங்கூறாமை, |

ஆகிய இவ்வாறு தருமமுமுடையான் தேவேந்திரனாவானென்பது கருத்து.

"இலனென்னும் எவ்வமுரையாமை யீதல்,
குலனுடையான் கண்ணேயுள" குறள்.

இக்குறளுக்கு பதினறு வகையாய்ப் பொருள் படுத்தினர் ஒரு வித்வான் எனக்கேள்வி, நாலைந்து பொருள் வெளி. 33.

**சிதையுரையான் செற்ற முரையான் சீறில்லான்
இயல்புரையா னீன முரையான்.— நசைவார்க்குக்
கூடுவதீ வானைக் கொவ்வைபோற் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து.**

(இ-ள்). கொவ்வைபோற் செவ்வாயாய்-கோவம்பழம்போற் கனிந்து சிவந்த வாயினையுடையாய், சிதையுரையான்—கேடு தருஞ் சொற்களைந்து, செற்றமுரையான்—சினமூட்டுங் சொற் கூறாது, சீறில்லான்-சினமுமற்றவனாய், இயல்புரையான்-தன் னால் இயலக்கூடிய மேம்பாட்டை எடுத்துப் பாராட்டாமல், ஈனமுரையான்—குறையையும் வெளிக்குக் காட்டாது, நசை வார்க்குக் கூடுவதீவானை—தன்னிடத்து வந்து ஏற்றோர்க்கு இல்லையென்னாது இசைந்தமட்டு முதவுதோனை, விண்ணோர் ந யந்து நாடுவர்—தேவருந் தேடிவந்து முகமன்கூறி தம்முட னிருத்தி உபசாரஞ் செய்வார். (எ—று).

இம்மையில் விருந்தோம்புவோர் மறுமையில் விண்ணோர் க்கு நல்ல விருந்தாவார் என்பதுபோல் இம்மையில் தம்மை நயந்து வந்தவர்க் குதவினல் மறுமையில் விண்ணோர் அவ ரை நயந்து நாடுவாரொன்பது வெளியாகவேண்டி நசைதலிர ண்டிடத்துங் கவிசேர்த்தமை காண்க.

செற்ற முரைத்தல்—நயவஞ்சகமாய்ப் பிறர்க்குக் கோபமூ ட்டல். சீறில்லாமை—பிறர் கோபமூட்டியுந் தான் கோபங் கொள்ளாமை. அறுபொருள்வெளி. 34.

**துறந்தார் துறவாதார் துப்பில்லார் தோன்று
திறந்தாரீடற்று ரினையர் - சிறந்தவர்க்குப்
பண்ணுநுஞ் சொல்வாய் பழியிலூண்பாற்படுத்தான்
மண்ணுளுமன்னை மற்று.**

(இ-ள்). பண்ணுருஞ்சொல்லாய்-இராகத்தினதுஇனிமையை வென்ற சொல்லையுடையாய், துறந்தார்—சந்நியாசிகளுக்கும், துறவாதார்—துறவாதவர்க்கும், துப்பிலார்—தரித்திரர்க்கும், தோன்று இறந்தார்—தென்புலத்தார்க்கும், ஈடற்றூர்—பலமற்றவர்க்கும், இனையர் சிறந்தவர்க்கு—இவர்போல் வராகிய மற்றுஞ் சிறந்த பாத்திரவான்களுக்கும், பழியில் ஊண்பாற் படுத்தான்-நல்வழியிலீட்டியஉணவையளித்தன்புசெய்தவன், மண்ணுளு மன்னனும்—(மறுபிறப்பில்) பூமியாளுவதற்கோரரசனவன். (எ—று).

துறவாதார்—பிரமச்சாரி, வானப்பிரஸ்தன் இருவரும்.

துப்பு—உணவு. து பகுதி, ப் சந்தி, பு தொழிற் பெயர்விகுதி. தொழிலாகு பெயராய் உணவிற்காயிற்று.

உணவு சகல ஐசுவரியத்திற்குந் தலையானதால், அவையில்லாரை, உணவிலார், துப்பில்லார், என்றது. கூழ் முதலியவற்றினுங் காண்க.

பாற்படுத்தான்—பால்—பங்கு. படுத்தான்—படும்படி செய்தவன். பங்கிற் படும்படி செய்தவன், தனது பொருளைப் பிறர் பங்கிலுஞ் சேரும்படி செய்தவன். 35.

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார் - சாலவும்
ஆழப்படு மூணமைத்தா ரிமையவரால்
வீழப் படுவார் விரைந்து

(இ-ள்). காலில்லார்-நொண்டிகளுக்கும், கண்ணில்லார்-குருடர்களுக்கும், நாவில்லார்—ஊமையருக்கும், யாரையும் பாலில்லார்—எவருடைய சவரக்ஷணையிலுமில்லாதவர்க்கும், பற்றிய நூலில்லார்—பதிந்த நூலறிவில்லார்க்கும், ஆழப்படுமூண் சாலவும் அமைத்தார்—உண்விணைமிக விரும்பி யளித்தவர், இமையவரால்—விண்ணோரால், விரைந்து வீழப்படுவார், சீக்கிரமாக விரும்பப்படுவார், (எ—று). ஆழப்படுமூண்—ஆழ் அப்பு, அடும், ஊண், எனப்பிரித்து (ஆழ்—ஆழ்ந்த, அப்பு—ஜலம், அடும்—சமைத்த) ஜலத்தினுல் சமைக்கப்பட்டாழ்ந்த உணவு எனக்கூட்டுக. அப்படுமூண்—பிறிதினம் நோக்காத அடை. வெண்டிங்கள் என்றாற்போல். ஆழந்தவுணவு—பெரியோர் விதித்த வுணவு. இங்கு அறுபொருள் வெளி.

வேண்டின் வலிந்து பொருள் கொண்டு, 'யானையும்' என்பதின், ஐ, யை—கு, மயக்கமாக்கி, மற்றும் யார்க்குமெனக் கொள்க. ஆயின் பாலில்லார் என்பதனை— அடையின்றிக் கொண்டு அதே அர்த்தமுறைத்துக்கொள்க.

1. காலில்லார்க்கும். 4. யார்க்கும்.
2. கண்ணில்லார்க்கும். 5. டாலில்லார்க்கும்.
3. நாவில்லார்க்கும். 6. நூலில்லார்க்கும்.

என ஆறு பொருள் காண்க. 36.

அழப்போகா னஞ்சா னலறிநற் கேளான் [ன்
எழப்போகா னீடற்று றொன்றும் - தொழப்போகா
என்னேயிக் காலனீ டோரார் தவமுயலார்
கொன்னே யிருத்தல் குறை.

(இ-ள்). அழப்போகான்— (காலனானவன் ஒருவன் முடியு காலம் வந்துவிட்டால்) அழுதாலும் விட்டுப்போகிறவனல்லன், அலறிநற் கேளான்—ஓவென அலறிக்கூவினுங் கேட்டிரங்குகின்றவனல்லன், எழப்போகான்—எழுந்தெங்கேனுஞ் செல்லுதற்கும் விடாதவன், ஈடற்றொன்றுந் தொழப்போகான—இழப்பவர் (நின்னையே குலதெய்வமாகத் தொழுவோம் என) வணங்கவும் விட்டுச்செல்லுகின்றவனல்லன், என்னே இவன்—இக்காலன் என்னதன்மையனாயிருக்கின்றான்? (ஆதலின்) ஈடோரார்—(காலனது வரவுக்கோர்) உபாயஞ்சூழாது, தவமுயலார்—தவம்புரியாது, கொன்னேயிருத்தல்—வீணேட்கழிந்துக்கொண்டிருப்பது, குறை—தகாதகாரியம் (எ—று). பிணிமுதலியதுன்பம் வந்துழித்தங்குலதெய்வ பிரார்த்தனை செய்தல்மரபு. இங்குமரணம் வருங்காலத்து இயலுஞ்செயலாமையின், அம்மரணம் நீங்கும்படித் தங்குலதெய்வத்தைத் தொழுதல், மரணத்துக்குரியவனாகிய காலனது வரவைத்தடுத்தற் பொருட்டாதலாலும் அவ்வாறு செய்தும் காலன் வந்தேதீர்வானாக, அவனையே குலதெய்வமாகக் கொண்டு வணங்கவும் அவன் போதற்கு இடம் பெறாமைகண்டுதவமொன்றுன் மட்டுமேவனைவெல்லல் கூறப்பட்டது. என்னே-தடாக்கொடுமையின்கண்ணது. 37.

எழுத்திணை னீங்காதெண் ணுலொழியா தேத்தி
வழுத்தினன் மாறாது மாண்ட - ஒழுக்கினால்
நேராமை சாலவுணர்வார் பெருந்தவம்
சாராமை சாலப் புலை.

(இ-ள்) எழுத்தினானீங்காது-(இறப்பும் பிறப்புமாகிய துன்பம்) கல்வியறிவினளவே நீங்காது, எண்ணாலொழியாது-(கல்வியறிவின் காரியமாகிய )தியான அளவிலே நீங்காது, ஏத்தி வழுத்தினான் மாறாது— (தியான காரியமாகிய) துதிக்குந் தோத்திரத்தினாலும்நீங்காது, மாண்ட ஒழுக்கினால் நேராமை சாலவுணர்வார் பெருந்தவம்— (இவைமுதலாகிய) மாட்சிமைப்பட்ட ஒழுக்கங்களினாலேயும் அவை தீர்த்துப் பேரின்பம் வாயாமை முற்றுங்கண்டதுறந்தோரது மாதவத்தினை, சாராமை சாலப்புலை— அடையாதிருத்தல் மிக்க அறிவீனமாம் (எ—று).

தோத்திரத்துக்குக் காரணம் தியானம், தியானத்துக்குக் காரணங்கல்வியறிவு. சுத்தமான கல்வியும், தியானமும் தோத்திரமுமாகிய ஒழுக்கங்கள் முத்தியைத் தருவன அல்ல பெருந்தவமே தரும். கல்விமுதலியன இதற்கு கருவியாயுள்ளனவேயன்றி வேறல்ல ஆதலின். பெருந்தவம்-நிட்டை. வழுத்து—முதனிலைத் தொழிற்பெயர்.

தவம் போகாமை யெனவும் பாடாந்தரமுளது, அங்கு தவத்திற்குப்போகாமை யெனக்கூட்டுக. போகாமை—இல்லறத்தைத் துறந்து போகாமை. உணர்வார்—முக்காலத்துப் பொது பொருளது. 38.

சாவ தெளிதரிது சான்றாண்மை நல்லது
மேவ லெளிதரிது மெய்போர்த்தல் - ஆவதன்கட்
சேற லெளிது நிலையரிது தெள்ளியராய்
வேற லெளிதரிது சொல்.

(இ-ள்). சாவதெளிது-(தானே வந்து சாருமாதலின்) இறத்தல்எளியது, சான்றாண்மையரிது-(அதற்குமுன்) நல்லோனெனப் பேர்படைத்தல் அரியது, நல்லது மேவல்எளிது-நல்லபொருளை விரும்பி (யதனை) யடைதல் எளியது, மெய்போர்த்தல் அரிது-(தான்) சத்தியத்தையே (தனக்கு காப்பு செய்யும்) ஆடை யெனத்தரித்துக் கொள்ளல் அரியது, ஆவதன்கட்சேறலெளிது, (தனக்குத்துணை) ஆவதாகிய பெருந்தவத்திற்குச் செல்லலெளிது, நிலையரிது-(நிட்டை கைகூடும் வரையங்கு) நிலைத்தல் அரிது, (ஏனெனில்) தெள்ளியராயும் வேறலை எளிது (ஆக்கல்) அரிது (எனச்) சொல்-சுத்த ஞானியரானவிடத்தும் (ஐந்தினையும்) வென்று அவித்தலை எளியகாரிய

மாகச் செய்தல் அரியதாகுமெனச் சொல்வாயாக (எ—று).
மகடூ உ முன்னிலையை வருவித்துச் சொல்வாயாக எனக் கூட்டுக.
தெள்ளியமொன்றதனால், வேறற்கு ஐம்புலனே யாமென்றறிக.
உம்மை விகாரந்தாற்றொக்கது-ஆக்கல், என, எச்சங்கள்.
ஐந்து புலன்களையும் வெல்லுதற்கண் அவர்க்குளதாம் அருமை கூறப்பட்டதேயன்றி அசாத்தியங்கூறியதன்று. 39.

உலையாமை யுற்றதற் கோடி யுயிரை
அலையாமை யையப் படாமை - நிலையாமை
தீர்க்கும்வாய் தேர்ந்து பசியுண்டி நீக்குவான்
நோக்கும்வாய் விண்ணி னுயர்வு.

(இ-ள்) உற்றதற் கோடியுலையாமை—தனக்குற்ற துன்பத்தை நீக்குதற்கு ஓடித்தளராது, உயிரை யலையாமை—பிறருயிரை வருத்தஞ் செய்யாது, ஐயப்படாமை—(மறுமையைப்பற்றி) சந்தேகம் நினையாது, நிலையாமை தீர்க்கும் வாய் தேர்ந்து—நிலையாத பிறப்பினை ஒழிக்கும் வழியறிந்து, பசி உண்டி நீக்குவான்—[பெருந்தவத்திற்கு இடையூறும்] பசிநோயையும் உணவு நுகர்ச்சியையுநீக்கித் தவஞ்செய்தவன், நோக்குமவாய்—உறைதற்கேயாராயுமிடம், விண்ணினுயர்வு—விண்ணுலகத்தினுச்சி, [எ—று].
வாய்—வழி, பலவிடத்துங் காண்க.
வழியறிதல்—உபாயஞ்சூழ்தல். பிறருயிரை, பிறவுயிரை யெனவுங்கொள்க. உண்டி, ஐம்புல நுகர்ச்சியையுங்கூற வந்த வர்தலையாயுள்ள உண்டி, என்றூர். அன்றியும் இதின் பரியாய நாமங்கள் பொதுவாய்அனுபவிக்கப்படும் பொருளுக்காதல் பெரும்பான்மை. உச்சி—மோக்ஷம், வீடு.
உலையாமை, அலையாமை, படாமை எதிர்மறை வினையெச்சம். நிலையாமை, யொன்றும் எதிர்மறைத் தொழிலாகுபெயர். 40.

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வௌவான் - இறுகானூய்
ஈடற் றவர்க்கீவா னுயி னெறிநூல்கள்
பாடற்ற பன்னு மிடத்து.

(இ-ள்). சிறியாரைச் சேரான்-கீழ்மக்களோடு சேராது, புலால் ஒன்னான்-புலாலுண்ணுதலை விரும்பாது, பொய்மறான்—பொய்யுரையைக் கொண்டொழுகாது, பிறர்பொருள் வெளவான்-பிறர்பொருளை விரும்பாது, இறுகாறாய்-பற்றுள்ளத்தால் மனம் இறுக்கங்கொள்ளாது, ஈடற்றார்க் கீவானாயின்-தளர்ந்தார்க்கொன்று கொடுத்துதவுவானாகில்—நெறிநூல்கள் பன்னுமிடத்து பாடற்ற—அறஞ் சொல்லும் நூல்கள் [இவனுக்கோர் தருமத்தை எடுத்துச்] சொல்லுங்காலத்துப் பயனற்றனவாம். [எ—று].

நெறி நூல்கள் பயன்படவேண்டுமெனின், இவனையன்றி மற்றோர்க்குக் கூறிக்கொள்ளட்டும், இவன் அவ்வாறு நூல்களின் பயன்யாவையுந்தானே அடைந்துள்ளானாதலால். அயலவயலவர் நூல் முதலியவாக இவர் மற்றிடத்துக் கூறலுங்காண்க. இறுகல்—தனக்குக் கிடைத்த பொருளினை யீதற்கண் மனம்வராது இறுக்கிக்கொள்ளுதல்.
மறுகல்—சுழலல், கலங்கல். மெய்யைப் பொய்யாக்குமிடத்தும் பொய்யை மெய்யாக்குமிடத்தும் இன்மையை உண்மையாக்குமிடத்தும் பணிஞ்செயல்

41.

**கொல்லா னுடன்படான் கொல்வா ரினஞ்சேரான்**
**புல்லான் பிறரில் புலான்மயங்கல் - செல்லான்**
**குடிப்படுத்துக் கூழீந்தான் கொல்யானை யேறி**
**அடிப்படுப்பான் மண்ணாண் டரசு.**

(இ-ள்). கொல்லான்—[பிறிதோருயிரைக்] கொல்லாமல், உடன்படான்—பிறர்புரியுங் கொலைக்கு முடன்படாது, கொல்வாரினஞ் சேரான்—கொலை புரிவோர் கூட்டத்தையுஞ் சாராமல், பிறரில் புல்லான்—பிறர் மனையாளைச் சேராது, புலான் மயங்கல் செல்லான்—ஊனுண்டலோடு கலவாது, குடிப்படுத்து—குடிகளை நிறுத்தி, கூழீந்தான்—உணவு முதலியவற்றை கொடுத்து அன்பு செய்பவன், கொல்யானையேறி—கொல்லுந் தன்மையையுடைய களிற்றி யானையிற் பவனி வந்து, மண்ணாண்டு—பூமியனைத்தும் ஓர் கோலோச்சி, அரசு—மற்ற அரசர்களை, அடிப்படுப்பான்—தன் பாதங்களில் வந்து வீழ்ந்து வணங்கச் செய்வான், (எ—று.)

பவனிவரல், உலாப்போதல், ஊர்வலம் வரல், ஒருபொருளன. கோலோச்சல்—செங்கோல் செலுத்தல், மனு நீதி முறையோடு ஆளுதல்,

ஈயந்தான் எனவரினும் ஈத்து; என்னுமிடத்துய கரவொற்றுவராமை காண்க. ஈந்தான் என்றே இருத்தல் வேண்டும்.

42.

சூதுவவான் பேரான் சுலாவுரையான் யார்திறத்தும்
வாதுவவான் மாதரார் சொற்றேறான் — காதுதாழ்
வான்மகர வார்குழையாய் மாதவர்க் கூணீந்தான்
தான்மகர வாய் மாடத் தான்.

(இ-ள்) காது தாழ்வான் மகரவார் குழையாய்—காதினை தாழச் செய்யா நின்ற பெரிய மகரமீன் போலும் வார்ந்த குண்டலத்தையுடையாய், சூது உவ்வான்—சூதாட்டத்தைக் காதலியாது, பேரான்—ஒன்றின் மறைந்து வஞ்சியாது, சுலாவுரையான்—பயனில்லாத சொற்களை விரித்துரையாமல், யார்திறத்தும்வாது உவ்வான்—ஒருவரிடத்தும் மாறுபட்டுரைத்தலை காதலியாது, மாதரார் சொற்றேறான்—அரிவையர் சொல்லுக்குக் காதினைமனதோடு கொடாது, மாதவர்க்கு ஊணீந்தான்றான்—தபோதனர்க்கு உணவு முதலிய கொடுத்து உபசரித்தவனான், மகரவாய் மாடத்தான்—மகர சித்திரத்தையுடைய மாடமாளிகையில் வாழ்பவனாவன் *(எ-று).

காதியையுமெனவும் பாடாந்தரமுளது—காதுக்குப் பொருந்தும்படியான எனக்கொள்க.

பேர்த்தல்— பெயர்த்தல், விட்டுநீங்கல், நல்லொழுக்கம் விட்டு நீங்கல், அப்பால் நீங்கியும் நீங்காதான்போல் வஞ்சித்தொழுகல்.

சுலா, சுல, சுல்வு; எனவரும். 'சுற்று' என்னும்பொருளது. cf. சுலாவிக்கழுவு, சுலாவியூற்று. 43.

பொய்யான்பொய் மேவான் புலாலுண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்தது வாலடிசில் - கையாதே
ஈத்துண்பா ரூகு மிருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பா னேத்துண்பான் பாடு.

(இ-ள்). பொய்யான்—பொய்யுரையாளாகி, பொய்மேவான்—பிறர் கூறும் பொய்யினையும் விரும்பானாகி, புலாலுண்ணான்—ஊனுண்டலை மறுத்து, யாவரையும் வையான்—யாவரையும் நிந்தனைசெய்யாது, வழி சீத்து—வழியொதுக்கி, வா

லடி சில்லையாதே ஈத்துண்பான்—பால்போலு முனைவினைக் களிப்புடன் [ அதிதிகளுக்கு ] அளித்துத்தானுமுண்பவன், இருங்கடல்சூழ் மண்ணரசாய்—பெருங்கடல்சூழ்ந்த பூமிக்கு அரசனாய், பாத்துண்பான்—பகுர்துண்பானும், பாடு எத்துண்பான்—தன் பெருமையை பிறர்பாராட்டக் சேட்டின் புறுவோனும், ஆகும்—ஆவான் (எ—று.)

பார்த்துண்ணல்—தன்னுடைய கருணையினாலும் வல்லமையினாலுங் குடியோம்புதலும் தானின் புறுதலும்.

வழிசீத்து-வழிவிலகி, வழியுண்டாக்கி. வழியுண்டாக்சல். சாலைமரம் வைத்தல், தண்ணீர்பந்தர் அமைத்தல், குளம் வெட்டல், கிணறு எடுத்தல், சுமைதாங்கி வைத்தல், முதலியன பெருந்தருமம், அவற்றிற்றலையா யது வழி சீத்தல். வழியுண்டாக்கிய பின்னரே அவ்வழி நெடுக மற்றத் தரும மமைக்க வேண்டுமாதலால். சீய்த்து; c f சய்ந்தான். 44.

க்கா ளியனெறி யின்னாத வெஃகான் [ன்
வழுக்கான் மனைபொருள் வெளவான் - ஒழுக்கத்தா
செல்வான் செயிரிலூ ணீவா னரசாண்டு
வெல்வான் விடுப்பான் விரைந்து.

(இ-ள்). இழுக்காணியனெறி-தாமொழுகு நெறியைத் தப்பாது, இன்னாத வெஃகான்-பிறர்க்கு துன்பந்தருவனவற்றைச் செய்ய விரும்பாது, மனைவழுக்சாது— பிறன்பனையாளைப் பிழையாது, பொருள் வெளவான்-பிறர் பொருளைப் பற்றாது, ஒழுக்கத்தாற் செல்வான்—தான்செல்லத் தகுங்குல நெறியாலொழுகி, செயிரில் ஊன் ஈவான்—குற்றமற்ற உணவு அளித்துதவுவோன், அரசாண்டு—இராஜ்ஜியபரிபாலனஞ்செய்து, விரைந்து விடுப்பான் வெல்வான்—மாற்றரசரை விரைவாக நீக்கவெல்லான். (எ—று.)

பிழைத்தல்—நயத்தல் என்னும் அபராதஞ்செய்தல்.
மனை—மனையாள்.

இல்—இல்லாளுக்காதல் 42ம் பாட்டில் காண்க.
இடவாகு பெயரென்பர். இதுமங்கலவழக்கு.
'அடுக்கடை பார்த்திருந்துண்பான். என்பிறர் மனையாள் கைபார்த்துண்பான் என்னும்பொருள் படக்கூறியதும் மற்றனவுங்காண்க. விடுப்பான்—எதிர்காலவினையெச்சம். 45.

**களியான் கள்ளுண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான் - எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணாண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.**

(இ-ள்.) களியான்—[கள்ளினை உண்டு[ களியாமலும், கள்ளுண்ணான்—கள்ளினை யுண்ணாமலும், களிப்பாரைக்காணான்—களிப்பாரைகாணாமலும், விருந்திற்கு ஒளியான்—வந்த விருந்தினரையுபசரித்தல் பயந்து ஒளியாமலும், விருந்தினர்க் குலையான்—விருந்தினரை உபசரித்து மன நோகாமலும், எளியாரை எள்ளான்—ஒன்றில்லாரை யிகழ்ந்துரையாமலும் ஈத்துண்பானேல்—ஏற்றோர்க்குக்கொடுத்துத் தானுமுண்பானாயின், மண்ணாண்டு கொள்வான்—தானே [தனிக்கோலால்] மண்ணனைத்தும் ஆண்டு கொள்வதுமன்றி, குடிவாழ்வான் கூர்ந்து—குடிவாழ்வு கூர்வான்—தன் இல்லறவாழ்க்கையினுமோங்கி வாழ்வான் [எ—.று)

விருந்தொளியான் என்று பின் 48 வது வெண்பாவில் வருதலுங்காண்க. 46.

*பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா ரடியார்ப் பரியான் – கரியார்சொல்
தேறா னியையான் தெளிந்தடிசி லீத்துண்பான்
மாறான் மண்ணாளுமாமற்று.*

(இ-ள்). பெரியோர் சொற்பேணி—[ ஒழுக்கத்திற் ] பெரியோரது உறுதிமொழியினைப் போற்றி, பிறழாது நின்று—[ அவவொழுக்குத்தக ] வழுவாது நிலைத்து, பரியாரடியார்ப் பரியான்—அன்பு நிறைந்த அடியவரைவிட்டு [அவர்க்குக்கருணைசெய்தலினின்று] நீங்காது—கரியார்சொற்றேறான்—மருணீங்காது சொல்லைச்சொல்லெனக்கொள்ளாது; இயையான்—அவரோடு பொருந்தாது, தெளிந்து-வேள்வியின்பயனறிந்து, ஈத்துண்பான்—பகிர்துண்டவன், மாறான் மண்ணாளுமாம்—[ இராஜ்ஜியந்தன்னைவிட்டு ] நீங்காதவனாய் பூமியனைத்தும் ஆளும் அரசன் ஆவன். (எ—று.)

மற்று. அசை. ஆளும், ஆம்—ஆண்பால்.

1st பரி-அன்பு, வழி, வழிபாடு. ஆர்-நிறைந்த. வினைத்தொகை.

2nd பரியான்—நீங்கான். 47.

வேற்றரவஞ் சேரான் விருந்தொளியான் றன்னில்லு
சோற்றரவஞ்சொல்லியுண்பானாயின்-மாற்றரவம் [ள்
கேளான் கிளையோம்பிக் கேடி லரசனாய்
வாளான்மண் ணாண்டு வரும்.

(இ-ள்). வேற்றரவஞ்சேரான்—பழிதருஞ் செயலை விரும்பானாகி, விருந்தொளியான்—வந்தவிருந்தினர்க்கஞ்சி ஒளியாமல், தன்னில்லுள் சோற்றரவஞ் சொல்லி யுண்பானாயின்—தன் இல்லத்தில் [பிறர் வந்துண்ணும் படியாகத்] தான் உண்ணுஞ் செய்தியை யறிவித்துப்பின் ஒருவன் உண்பானாயின், மாற்றரவங்கேளான்-பகையரசர் [உளர் என்னும் மாத்திரைச்] சொல்லுங் கேட்கவேண்டானாய், கிளையோம்பி-தன்குடும்பப் பரிதுகாப்புப்பெற்று, கேடிலரசனாய்—அழிவில்லாத அரசுரிமையுடையனாய், வாளான் மண்ணாண்டுவரும்—வளாயுதத்தால் வெல்லும் பூமியினை ஆண்டுகொண்டிருப்பான் (எ-று).

அரவம்—ஓசை, புகழ். வேற்றரவம்—இகழ், நிந்தை. தன்னிலுள் என்பதை இடைநிலைத் தீவகமாகக் கொள்ளாமை இல்லம் நோக்கிவந்த விருந்துந், தான்புறத்தே கண்டழைக்கத்தகும் விருந்தும் பொருந்துதற்கென்க.

ஆண்டு வரும் என்ற பொருளாற்றல் அளவில் நீடூழி ஆள்வன், எனப்பொருள் கிடைத்தல் காண்க.

நீடூழி ஆளுதலாவது தானே தன்சந்ததி ரூபமாயுமிருந்தாளுதல். 48.

யானை குதிரைபொன் கன்னியே யாநிரையோ
டேனை யொழிந்தவிவை யெல்லாம் — ஆனெய்யா
லெண்ணனாய் மாதவர்க்கூ ணீய்ந்தான் வயிச்சிர
வண்ணனாய் வாழ்வான் விருந்து.

(இ-ள்). யானை-யானையும், குதிரை-குதிரையும், பொன்-பொன்னும், கன்னி—கன்னிகையும், ஆநிரையோடு—பசுவின் கூட்டத்தோடும்; ஏனைஒழிந்த-மற்றப்பொருள்களோடும், இவை யெல்லாம்-இப்பொருள்களை யெல்லாம், எண்ணனாய் ஈந்தான்—வேண்டிய அவரவர்க்கே இசையறிந்து ஈந்தவனும், மாதவர்க்கு ஆனெய்யால் ஊணீந்தான்-தபோதனர்க்குப் பசுவினெய்யோடுண்டியளித் தன்புசெய்தவனும், [ஆகிய ஒருவன்.

வயிச்சிரவன்னனாய் வருத்து வாழ்வான்—குபேரப்பட்டம் பெற்று வாழ்வான் [எ—று].

ஒழிந்த—இறந்தகாலவினையாலணையும் பெயர்.

என்னனாய்—என்றமாத்திரையில் எவர் எவர் எதுவிரும்புவாரோ அவரவர்க்கு அதை யளித்தலும், மாதவர்க்கு அனெய்யோடளாவிய உணவிடுதலுங் கிடைத்தமை காண்க.

வருத்து வாழ்வான்—வருத்து, என்னுஞ்சொல் பிராகிர்தமாகி, பருத்து எனவழங்கி செல்வத்திற்கும் பெருமைக்கும் வழங்கும். c f. அவன் பருத்துக் கொழிக்கிருன். 49.

என்ளே பருத்தியே யெண்ணேயெழுத்தாண்ட
வள்ளே துணிவேயிவற்றேடு—கொள்ளென
அன்புற்ற சனங்கொடுத்தான் றுணையிறே
டின்புற்று வாழ்வானியைந்து.

(இ-ள்). அன்புற்று—அன்புடன், அசனம்—உணவினையும், என்ளே—என்ளினாலாகிய எண்ணெயையும், பருத்தியே—பருத்தியிலாகிய உடைக்கையையும், (அளித்து) எண்ணே எழுத்தே—கணிதநூலையும் இலக்கணநூலையும், ஆண்டவள்ளே துணிவே யிவற்றேடு—பயன்படும் நுட்பத்தோடும் (ஐயம் திரிபு நீங்கிய) தெளிந்தவறிவோடும், கொள்ளெனக் கொடுத்தான்—(கொள்வோர்க்கு) மனசாரக்கொடுத்தவன், துணையிறேடின்புற்று இசைந்து வாழ்வான்—தன்மனைவியுடனின்பம் அனாவி வாழ்வான் (எ—று).

கொள்வோர்—மாணக்கர். என், பருத்தி—கருவி ஆகுபெயர்கள். வள்—கூர்மை, நுணுக்கம், நுட்பம். இதனால் வழிபடுவோராகிய மாணக்கர்க்குதவி கூறப்பட்டது. என், பருத்தி—'பகடுநடந்தகூழ்' என்னுங்கருத்துக் கிசையவந்த தெனினுமாம்.

ஆறு பொருள் வெளி.

1. அசனம். 4. எண்ணெழுத்து.
2. எண்ணெய். 5. வள் (நுட்பம்).
3. உடை. 6. துணிவு.

என்னு மெழுத்தும் வேறுக்கின், எழு பொருளுங்கண்டுருக்கவாயுங் கைக்கொள்க.

பதவுரை பொழிப்புரையுமாயது முற்றுங்காண்க.

To be continued.

கணபதி முன்னிற்க.

---

# இலக்கணத்தெளிவு.

## I.

1. இவ்வுலகத்திலு மற்றெங்கும் நாம் கண்ணால் பார்க்கக்கூடியதும் மனசால் உத்தேசிக்கக் கூடியதுமாகிய எல்லாம் பொருளென்னப்படும்.

2. அப்பொருள் (1) இயற்கைப்பொருளென்றும், (2) செயற்கைப் பொருளென்றும் இரண்டுவகைப்படும்.

பூமி, மலை, கடல், இயற்கைப்பொருள்.
வீடு, கோபுரம், வாவி, செயற்கைப்பொருள். } உ-ம்.

3. இவ்வகைப்பொருள்களின் பேதாபேதங்களைப் பகுத்தறியும்படி ஒவ்வொன்றும் தனித்தனிப் பெயர் பெறும்.

4. இந்தப் பெயரானது இடுகுறியாய் வருதலும் காரணம் பற்றி வருதலுமுண்டு.

மரம், பனை. முதலியன இடுகுறிப்பெயர்.
அணி, முடி முதலியன காரணப்பெயர். } உ-ம்.

5. பொருள்களுக்கு இவ்விதமாய் வந்த பெயரைச் சுட்டிநிற்குஞ்சொல் பெயர்ச்சொல் என்னப்படும்.

## II.

6. இப்பொருள்கள் தத்தமக்குரிய செயல்களையுமுடையனவாம்.

7. செயலும் இயற்கைச் செயலெனவுஞ் செயற்கைச் செயலெனவும் இருவகைப்படும்.

8. இயற்கைச் செயலாவது ஒவ்வொரு பொருளுக்கும் இயற்கையாயமைந்துள்ள குணமேயாம். குணம், பண்பெனவும்படும்.

9. பொருள்களுக்கிவ்விதமா யமைந்துள்ள பண்பைச்சுட்டிநிற்குஞ்சொல் பண்புச்சொல் என்னப்படும். செம்மை, சிறுமை முதலியன பண்புகுறிக்குஞ் சொற்களாம், (உ ம்)

10. செயற்கைச் செயலாவது ஒவ்வொரு பொருளுக்கும் இயற்கையாயமைந்துள்ள குணத்தின் வழியாலேனும் வேறு காரணங்களினாலேனும் அப்பொருள்கள் புடைபெயர்ந்துசெய்யுநடத்தல், வருதல் முதலிய தொழில்களேயாம். செயல், தொழில், வினை, ஒரு பொருளன.

11. பொருள்கள் இவ்விதமாய்ச் செய்யுந் தொழிலைச் சுட்டிநிற்குஞ் சொல் வினைச்சொல் என்னப்படும்.

நட, வா, மடி. முதலியன வினைச்சொற்களாம். (உ-ம்)

III.

12. இப்பொருள்களையும், அவற்றின் தன்மையையுஞ் செயலையும் நாமனைவரும் ஒரு தன்மையாக அறிந்து சொல்லும்படிக்கும் நம்மில் ஒருவர் விசேஷமாயறிந்துள்ளதை மற்றவர்களுக்குத் தெரிவித்துக் சொல்லும்படிக்கும் கருணைசாராகிய அநாதி முத்தசித்தர் தாமேனும் தம்வழிநின்ற மஹான்கள் வழியேனும் அநேக பாஷைகளை நித்தியப் பொருள்களாக உண்டாக்கியிருக்கிறார்.

13. இவ்வாறு வந்த அநேக பாஷைகளுள்ளும் இத்தேசத்தில் வழங்கிக்கணக்கிட்டு வருவன பதினெட்டேயாம்.

அவை வருமாறு:——

| | | |
|---|---|---|
| 1. தமிழ். | 7. குடகம். | 13. வங்கம். |
| 2. சிங்களம் | 8. கொங்கடம். | 14. சங்கம். |
| 3. சோனகம். | 9. கன்னடம். | 15. மகதம். |
| 4. சாவகம். | 10. கொல்லம். | 16. கடாரம். |
| 5. சீனம். | 11. தெலுங்கம். | 17. கவுடம். |
| 6. துழுவம். | 12. கலிங்கம். | 18. குசலம். |

14. இவையுமற்றுள்ள பாஷைகளுஞ் சப்தத்தாலும் உருவத்தாலும் பேதமுடையனவாவதன்றிப் பெரும்பான்மை ஒத்து நிற்கும்.

15. இவற்றுள் தமிழ் உருவாய் விளங்கும் இலக்கியத்தின் அமைதியாகிய இலக்கண நூலைப்பற்றித் தெளிவுபடக் கூறுமிட்டது.

16. தமிழ். செந்தமிழ் எனவுங் கொடுந்தமிழ் எனவும் இருவிதப்படும்.

17. சந்தனப்பொதியச் செந்தமிழ் முனியுஞ் சௌந்தர பாண்டியனெனுந் தமிழ் நாடனுஞ், சங்கப்புலவருந்தழைத்தினிதிருந்த மங்கலப்பாண்டிவளநாடே செந்தமிழ் வழங்கும் நாடாகும்.

18.

| | | |
|---|---|---|
| 1. தென்பாண்டி. | 5. வேண். | 9. அருவாவடதலை. |
| 2. குட்டம். | 6. பூழி. | 10. சீதம். |
| 3. குடம். | 7. பன்றி. | 11. மலைநாடு. |
| 4. கற்கா. | 8. அருவா. | 12. புனனாடு. |

இப்பனிரண்டு நாடுகளுமே கொடுந்தமிழ் வழங்கும் நாடுகளாம்.

To be continued.

## TRANSLATION OF ELATHI.

1. O thou whose tresses are adorned with flowers! A wide spread reputation, prosperity, praise, an active life, learning, charity, these six adorn only those who are born in a noble family and live strictly according to the Vedas.

2. O thou whose tresses are adorned with flowers full of honey! He will excel not only those of this world; but also the Gods, who will not be accessory to the act of killing, who will not himself kill, who abhors feeding on flesh, who will not inflict any pain on his fellow creatures, who will not practise deception and who will not be induced by any thing to give up his position.

3. To undergo austerities is easy; but to give alms is difficult. It is difficult for worthy persons to do any thing wrong; to attain greatness is easy for them. Deviation from virtue is necessarily followed by a future birth; in which birth it will be very difficult to get rid of the distresses peculiar to it.

4. To get rid of one's own distress, to refrain from despising others, to avoid low company, to relieve a neighbour's distress, to live so as to avoid censure, to speak kindly to others, — a man who can do these things does not require the aid of the ethical precepts of learned people.

5. He who never tells a lie to benefit himself, or to benefit his friend, who speaks only the truth, who never sets his affection on any property as being his own, who does not believe the fine words of women adorned with flowers, and who is not puffed up by prosperity, possesses all the virtues described by other learned persons.

To be continued.

இந்த ... ா ...யே செய ... பட் ... தென்பதற்குத்
...ணிவு 'பா ... ன்ட ... முதனிலைப்பு. ... 54ம் ... ன்
...வாலும், ... ர் தந் ... லும்' என்னும் ... லைப்புடைய
...ம் வெண்ட ... மற்றெ ... தங்கண்டு கொள்க.

வலாதி—ஓ. ... பணி ... லை ... ர்ப்பது,

" ... இந ... தலைவிலை ... ர்ப்பது.

*Translation of ஏலாதி will be sent gratis.*

இலக்கணந்தெளிவு.

*(In the Press).*

*And*

ஏலாதி. *Price 6. Annas. Each.*

*Apply to R. S. Sheppard Esquire. B. A.*

*Principal.*

*Hindu College Tinnevelly.*